
# ஞானச்சுடர்

ஆவணி 2025

332ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய**
**வாயினர் ஆதல் அரிது.**

**பொருள் :** நுட்பமான கேள்வியைப் பெறாதவர் வணக்கமான சொல்லைப் பேசமுடியாது. (419)

**செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்.**

**பொருள் :** செவியினால் நுகரப்படும் சுவையுணர்வை அறியாது வாயினாலுண்ணப்படும் உணவின் சுவையை அறியும் மக்கள் இருந்தென்ன, மடிந்தென்ன? (420)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*



**நல்லூர் வெளியில்**

நல்லூர் வெளியிலே பொதுநடம் புரிகிறான்
நங்கள்குரு நாதன் எங்கும் பிரகாசன்
எல்லாரை யுந்தன் னிடத்திலே காண்பவன்
இயம நியமங்களில் எள்ளளவு மோபிசகான்

பொல்லாப்பிங் கில்லையென்று போதனை செய்வான்
புகழ்ச்சியு மிகழ்ச்சியு மொன்றாகக் காண்பவன்
செல்லப்ப னென்னுந் திருப்பெய ருடையான்
சிங்கார நடையொடு சிரிப்பினை யுடையான்

ஆரறி வாரென அடிக்கடி சொல்லுவான்
தேரடிப் படியிலே சிங்கார மாய்க்கிடப்பான்
பேரறி வாளனெனப் பிறரெவரு மோவறியார்
பித்தனென் றுலகோர் பேசுவா ரேசுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3  சுடர் - 332

**2025** **பொருளடக்கம்** **ஆவணி**


| | | |
|---|---|---|
| சோதனைமேல் சோதனை... | மு. செல்லத்தம்பி | 01 03 |
| ஆலயங்களில் கொடிமரம்... | ஆ.தா.இ. ஜெயபாலன் | 04 – 05 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 06 – 09 |
| ஆடி அமாவாசை | கு. சோமசுந்தரம் | 10 – 13 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 14 – 15 |
| ஆற்றல்களும் அறிவுடைமை | இராம ஜெயபாலன் | 16 – 19 |
| திருவடிப் பெருமை | செ. பாலச்சந்திரன் | 20 – 22 |
| ஐந்தொழிலில் மறைத்தல்... | கு. சிவபாலராஜா | 23 – 25 |
| தில்லைக் கூத்தனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 26 – 29 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 30 – 35 |
| ஐயப்பன் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 36 – 37 |
| ஞானஞாயிறு நாவலர்... | ச. தண்டபாணிகதேசிகர் | 38 – 41 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 42 – 45 |
| நல்லூரான் அருள்பெற்ற... | அ. நளினாசினி | 46 – 47 |
| திருப்புகழைக் கற்றார்... | துரை. கணேசமூர்த்தி | 48 – 50 |
| சந்நிதியான் ஆச்சிரம... | பேரவையினர் | 51 – 52 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# ஆடி மாத வெளியீடு

## வெளியீட்டுரை:

ஞானச்சுடர் 331ஆவது மலர் வெளியீட்டுரையை விரிவுரையாளர் செல்வி தயாளினி குமாரசாமி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையில் 331ஆவது ஞானச்சுடர் மலரின் வெளியீட்டுரையினை ஆற்றி வெளியிட்டு வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகின்றேன். சந்நிதியான் ஆச்சிரமத்தினுடைய சமுதாயப் பணிகளையும், சமூகப் பணிகளையும் நோக்குமிடத்து அதன் செயற்பாடுகள் வியக்கத்தக்க வகையில் காணப்படுவதை அவதானிக்கலாம். அதன் ஒரு அங்கமாகவே இம் மலர் வெளியீடு ஆகும்.

இம் மலர் வெளியீட்டினை நான் இன்றைய வெளியீட்டுரையிலே ஏன் இந்த மலர் வெளியீடு செய்யப் படுகின்றது. இதனது தேவை இந்த சமுதாயத்திலே எத்தகையதாக இருக்கின்றது. இம் மலர் வெளியீட்டின் முக்கியத்துவத்தால் என்ன பயன்கள் எல்லாம் எம்மவர்களுக்கு கிடைத்திருக்கின்றது என்ற அடிப்படையிலே எனது கருத்துக்களைக் குறிப்பிட்டு இம் மலரினை வெளியிட்டு வைக்கலாம் என நினைக்கின்றேன்.

இந்த ஞானச்சுடர் என்ற பெயரினை எடுத்துக்கொண்டால் ஞானம் என்பது அறிவு சார்ந்த கருத்தாக இருக்கின்றது. ஆகவே இந்த நூல் ஞானச்சுடர் என்ற பெயரினைத் தாங்கி வந்திருக்கிறதென்றால் அறிவு சார்ந்த பல கருத்துக்களை உள்வாங்கி அது சார்ந்த படைப்புக்களாக வெளிவருவதை அவதானிக்கலாம்.

இன்றைக்கு 331ஆவது மலர் வெளிவருகின்றது என்றால் சாதாரணமான விடயம் கிடையாது. கால் நூற்றாண்டு கடந்து இந்த ஞானச்சுடர் மிளிர்ந்துகொண்டிருக்கின்றது என்பது உண்மையான ஆழமான எனது கருத்தாகும். இந்த ஆச்சிரமத்தோடு சிறிய காலம்வரை நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கின்ற அடிப்படையிலே இன்றைக்கு பல்கலைக்கழகம் ஒன்றின் விரிவுரையாளராக என்னால் இருக்க முடியுது என்றால் அது இந்த நூல் தந்த பங்கும் இருக்கின்றது என்பது எனது கருத்து ஆகும். எனவே இந்த நூலுக்கு கிடைக்கக் கூடிய அங்கீகாரம் என்பது எந்தளவுக்கு என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். இனம் சார்ந்து சர்வதேச ரீதியாக புகழ்பெறும் அளவுக்கு இன்றைக்கு இம் மலர் இருக்கின்றதென்பதே எனது ஆணித்தரமான கருத்தாகும்.

வரலாறுகள் கடந்தும் எங்களது இனத்துவம் சார்ந்த, சமயம் சார்ந்த கருத்துக்களை இன்றும் பேசிக்கொண்டிருக்கின்றோம் என்றால் அதற்கான காரணம் எழுதி வைத்தவர்களின் பொக்கிசங்கள்தான் என்று கூறவேண்டும். ஆகவே பேச்சுக்கும் கருத்துக்கும் இல்லாத முக்கியத்துவம் எழுத்துக்கு இருக் கின்றது.

ஒவ்வொரு தடவைகளிலும் இந்த நூல் என்னுடைய கைகளிலே தவழ்கின்றபொழுது ஓர் பூரிப்பு வரும். ஏனென்று சொன்னால் முருகனுக்கும் எமக்கும் இருக்கின்ற தனித்துவமான தொடர்பே ஆகும். அதற்கு இந்த நூலே சான்றாகும்.

ஓர் நூலினை அச்சிடுவது என்பது இலகுவான காரியம் கிடையாது. ஏனென்றால் கட்டுரைகளை சரியாகத் தேர்ந்தெடுக்கவேண்டும், தேர்ந்தெடுத்த கட்டுரைகளை பிழை திருத்தம் செய்யவேண்டும், முன்னுக்குப் பின் முரனான விடயங்களை சரியான முறையிலே ஒழுங்குபடுத்தக்கூடிய விடயங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமைப்படுத்தப்பட வேண்டும் அதையும்தாண்டி அச்சுப்பதிப்பதற்கு தட்டச்சு செய்வதற்கான இலத்திரனியல் சாதனங்களின் வேலைகளையும் செய்யவேண்டும் என்றார். இன்றைய நாளிலே இந் நூலுக்குரிய வெளியீட்டுரைக்கான சந்தர்ப்பத்தை தந்த அன்புக்குரிய மோகனதாஸ் சுவாமிகளுக்கு அன்பான நன்றியினைக் கூறிக்கொண்டு உங்கள் எல்லார்க்கும் நிறைவான அன்பும் அருளும் கிடைக்க வேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரை யினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

ஆடி மாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை சைவப்புலவரும் ஆசிரியருமான திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

ஞானச்சுடர் என்றாலே அறிவாகிய விளக்கு. அந்த அறிவாகிய விளக்கைப்பற்றி நாங்கள் விளக்குவது என்பது முடியாத காரியம். இந்த நூலானது பன்முகப்பட்டவர்களின் கருத்துக்களையும் தாங்கி வருகின்றதை காண முடிகின்றது. சிறியவர்களாக இருக்கலாம், பெரியவர்களாக இருக்கலாம், சான்றோர்களாகவும் இருக்கலாம். எவ்வளவு அறிவுசார்ந்த புத்திஜீவிகளாகவும் இருக்கலாம். ஆனால் இது முருகனாலே அருளப்படுகின்ற நூலாகவே நான் கருதுகின்றேன்.

ஏனென்றால் எத்தனையோ கட்டுரைகள், அதாவது கட்டுக்கட்டாக குவிந்து கிடக்கும் கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து எல்லோராலும் செவ்வை பார்க்கப்பட்டு இறுதியாக சுவாமிகளாலே செவ்வை பார்க்கப்பட்டுத் தான் இந்த நூல் வெளியீடு செய்யப்படுகின்றது. அந்தளவுக்கு முருகன் அருளாலே வெளியீடு செய்யப்படு கின்ற ஓர் மலராகும்.

இந்த நூலுக்கு வெளியீடோ, மதிப்பீடோ செய்யவேண்டிய தேவை இல்லை. அதுதான் நான் முதலே கூறிவிட்டேன் இம் மலருக்கான கருத்துக்களைக் கூறுவதற்கு நான் தகுதியற்றவர் என்று. ஆனால் புதிது புதிதாக வருபவர்களுக்கு இங்கு என்ன நடக்கிறது, ஆச்சிரமம் என்ன என்னத்தைச் செய்கின்றது. இந்நூலானது மாதாந்த கடைசி வெள்ளிக்கிழமை எவ்வாறு வெளியிடப்படுகின்றது போன்ற விடயங்களை அவர்கள் தெரிந்து கொள்வதற்காகவும் என்னைப்போல சிலரை சிறப்பிப்பதற்காகவும் ஏனென்றால் இந்த நூலை மதிப்பீடு செய்வதற்கு எத்தனையோ பெரியவர்கள், சான்றோர்கள் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களை எல்லாம் அழைக்காமல் எங்களைப் போன்றவர்களை இங்கே அழைத்து இதனை மதிப்பீடு செய்வதென்றால் எல்லாம் முருகனுடைய திருவிளையாடல் எங்களை சிறப்பிப்பதற்காக என்றுதான் நான் நினைக்கின்றேன். அந்த வகையில் உள்ள எல்லா கட்டுரைகளையும் கூறுவதற்கோ எனக்கு தகைமையோ அல்லது நேரமோ போதுமானதாக இல்லை. இக் கட்டுரைகளை எடுத்து அதனுள் உள்ள சிறப்பான விடயங்களையும் எனக்குத் தெரிந்த விடயங்களையும் மதிப்பிடலாம் என நினைக்கின்றேன்.

முதலிலே பாருங்கள் அட்டைப்படத்தின் விளக்கத்தினை இந்த ஆச்சிரமத்திற்கு முன்னுதாரணமாக விளங்கிய சுவாமிகளின் குரு முதல்வர் மயில்வாகனம் சுவாமிகள் மற்றும் கலை பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கிய ஓர் படம், அடுத்து முருகனுடைய படம், வேலினுடைய படம், பூவரசு மரத்தினுடைய படம், இந்த ஆச்சிரமத்தினுடைய படம் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக இந்த முகப்பு தோற்றம் காணப்படுகின்றது. இதுவே முகப்பு அட்டையின் சிறப்பு ஆகும்.

மலரில் காணப்படுகின்ற ஒவ்வொரு கட்டுரைகளினை விளக்கி அதன் தரம் எழுதியவர்கள் ஒவ்வொரு பாடத் துறைகளுடனும் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் கூறி இன்றைய சந்தர்ப்பத்தில் மதிப்பீட்டுரை ஆற்று வதற்கு சந்தர்ப்பத்தைத் தந்த மோகனதாஸ் சுவாமிகளுக்கு நன்றி கூறி தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

நாம் உயர்ந்திருக்க வேண்டும். நம் வாழ்வு உயர வேண்டும் என்றுதான் நினைக்கின்றோம். ஆனால் உயர்ந்தவர்கள் ஒரு சிலரே ஆவார். இதற்கு நாம் உயர்வடைய வேண்டும் என்று எண்ணுகின்றோமே அன்றி அதற்கான வழி வகைகளை மேற்கொள்ள தவறுகின்றோம். அதாவது எண்ணம் கொள்கின்றேமே அன்றி செயற்பாடுகளை மேற்கொள்ள நினைப்பதில்லை. அதனால்தான் நாம் எண்ணிய எண்ணங்களின்படி வாழ்வதில்லை.

இவ்வுலகில் பணம் படைத்தவர்களையும், படிப்பினால் உயர்ந்தவர்களையும் உலகம் போற்றும் ஆனால் அவர்கள் உயர்வு பெறுகின்றவர்களாக இருப்பதில்லை. ஆகவே பணமும் படிப்பும் நமக்கு நிச்சயமாக உயர்வு தரமாட்டா. எனவே உள்ளம் உயர்ந்தால் நாம் உயர்வு பெறமுடியும். நம்மை நாமே மீளாய்வு செய்யும் பழக்கம் ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டும். இவ்வாறு அடிக்கடி நம்மை நாமே சோதிப்பதால் உள்ளத்தில் உள்ள மாசுக்கள் நீங்கி புனிதமான அன்பு உண்டாகும். இதுவே எங்களை சமூகத்தில் உயர்ந்த பண்புடையவர்களாக ஆக்கும்.

பணத்தினால் படிப்பினால் உண்டாகாத பெருமையை தியாகத்தால் அடைய முடியும். தனக்கென்று வாழ்பவன் சுயநலவாதியாகின்றான். பிறர்க்கென்று வாழ்பவன் தேசாபிமானியாகின்றான். தனது சொல், செயல், உடமை எல்லாம் பிறருக்கே அர்ப்பணம் செய்துவிட்டு புகழையும் புண்ணியத்தையும்கூட விரும்பாமல் தியாகம் புரிந்து வாழ்பவனே மனிதருள் மாணிக்கம் ஆகின்றான். அவர்களது சொல்லிலும் செயலிலும் தன்னலம் இருக்காது. தன் வாழ்நாளையே சமூகத்திற்காக தியாகம் செய்பவனாக இருப்பான். தூய அன்பு நிறைந்திருக்கும். இவர்களே உயர்ந்தவர்களாக இருப்பார்கள்.

வாழ்க்கையில் மனம் போன போக்கில் நடந்துகொள்ளாதீர்கள். பெருந் தன்மையுடன் நடந்துகொள்ளுங்கள். சந்தர்ப்பங்கள் எழுப்பும் அலைகள் நிகழ்ச்சிகள் தோற்றுவிக்கும் இடுபறிகள் உங்களை இங்கும் அங்கும் தூக்கிப்போட்டு தடுமாற வைக்கலாம். ஆனால் நீங்கள் உங்கள் எண்ணத்திலும் செயலிலும் பெருந்தன்மை யோடு இருக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் என்றும் பவுத்திரமாக இருக்கலாம். இதயத்தில் மலரும் இந்த பெருந்தன்மை உங்கள் ஒழுக்கம், செயல், பணிகளில் பளிச்சென்று ஒளிவிட வேண்டும். இந் நிலையே உங்களை சாதனையாளராக்கும். சமூகத்தில் நற்பிரஜை என்ற நிலையை உருவாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**A. ஆனந்தகுமார்**

(லண்டன்)

**உரிமையாளர்**

(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr திருமதி பத்மராணி குகானந்தன்**

(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

**S. உமாகாந்தன்**

(கொழும்பு)

**சி. சிவமூர்த்தி**

(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**அ. சிவகுமார்**

(யாழ்ப்பாணம்)

**A. நாகரெத்தினம்**

(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

**இ. குமாரசாமி J.P.**

(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

**பொ. குமாரசாமி**

(சட்டத்தரணி, நவிண்டில்)

**திருமதி கௌரி சுரேசன்**

(ஆசிரியர், ஆவரங்கால்)

**கு. நிரோசன்**

(தொண்டைமானாறு)

**P. ஜெகதீசன்**

(மிருசுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நா. சிவசிதம்பரம்**

(கோணாவளைலேன், கொக்குவில்)

**இராசையா தங்கவேல்**

(அச்சுவேலி)

**S. அருளையா**

(கொழும்பு)

**ச. பத்மநாதன்**

(தெற்குத் தோப்பு, புத்தூர்)

**க. தெய்வேந்திரம்**

(பண்டத்தரிப்பு)

**தே. தேவராஜேந்திரன்**

(திகிரி லேன், தும்பளை)

**திருமதி சி. செல்வநாயகி**

(கரவெட்டி)

**முத்து கணேஷ்**

(மஞ்சத்தடி, இணுவில்)

**K. கஜமுகன்**

(இராசவீதி, நீர்வேலி)

**செ. சிவலிங்கம்**

(மலர் வசந்தம், இணுவில்)

**N. ஜெயரட்ணராசா**

(பண்ணாகம், சுழிபுரம்)

**சி.து. கலைச்செல்வம்**

(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

**தலைவர்**

(வாழ்வகம், சுன்னாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வை.ச. பரஞ்சோதி**

(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

**செ. வைகுந்தவாசன்**

(உடுப்பிட்டி)

**வை. செல்வராணி**

(உரும்பராய்)

**திருமதி ஜெயக்குமாரன் செல்வமலர்**

(சித்தங்கேணி)

**V.S. ஸ்ரீஸ்கந்தசாமி**

(தாளையடி)

**S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்**

(மானிப்பாய் தெற்கு)

**இ. தயாபரன்**

(கோண்டாவில்)

**திருமதி தம்பிராஜா**

(திருநெல்வேலி)

**கருணாகரன் கேணுகா**

(அராலி)

**திருமதி தி. பரமேஸ்வரி**

(ஆனைக்கோட்டை)

**S. பொன்னம்பலம்**

(சுன்னாகம்)

**ப. திருக்குமரன்**

(அமுதசுரபி, கட்டுடை)

**சி. நவரெத்தினம்**

(ஆனந்தா வீதி, மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. சுப்பிரமணியம்**

(சமரபாகு, உடுப்பிட்டி)

**சிறீ மாதவன்**

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**ரஞ்சினி ஸ்ரீஸ்கந்தராசா**

(யாழ்ப்பாணம்)

**ச. திவாகரன்**

(உரும்பராய் மேற்கு)

**க. சச்சிதானந்தன்**

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

**நா. மகேந்திரராசா**

(பிறேம மகால், வல்வெட்டி)

**சு. சிவராசா**

(கொக்குவில்)

**நல்லதம்பி குமரவேள்**

(இணுவில்)

**கா. அருளானந்தன்**

(அராலிவீதி, சங்கானை)

**பத்மநாதன் குணசுந்தரி**

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)

**ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்**

(ஆதவன் அரிசி ஆலை, அச்சுவேலி)

**ச. மார்க்கண்டு**

(ஊரெழு மேற்கு)

**திருமதி கமலஹாசன் மஞ்சுளா**

(வல்வெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைமேல் சோதனை போதுமடா சாமி

– *திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி* அவர்கள் –

பொன்னும் பொருளும் நிறைந்தவன் நெஞ்சம் பொய்யில் வளர்ந்தகாடு
எண்ணும் எழுத்தும் நிறைந்தவர் நெஞ்சம் இறைவன் திகழும் வீடு.

உயிர்கள் யாவும் இன்பத்தை உவப்பது இயற்கையே. இந்த உயிரினங்கள் யாவும் இன்புறவே தம் வாழ்வை முன்னெடுத்து வாழையடி வாழையாக விருத்திகொண்டு உலக இயல்பை உருண்டோட வைப்பதையே உள்நோக்கமாகக் கொண்டிருந்தன. இந்த நிலையில் உலகம் மேம்படுவதற்கு மகத்தான சாதனைக்கு உரித்தாக மனிதகுலம் மாற்றிமை பெற்று விளங்கி வரலாயிற்று. இந்த மனிதகுலம் மண்ணில் சகல வளங்களாலும் வாய்ப்புக்களாலும் சிறந்து விளங்கவே வாய்மை மிகுந்த பௌத்தநிலை வையகம் முழுவதும் வளப்படுத்தி இருந்தான் இறைவன்.

இதற்கேற்ப மனிதனானவன் உலகில் எங்கு எவ்விதம் எப்படி இருந்தபோதும் அறிவாலும் ஆற்றலாலும் மிகைத்தோங்கும் அருளாளர்களுக்கும் ஆன்மீகவாதிகளுக்கும் மற்றும் உழைப்பிற்கும் ஊக்கத்திற்கும் பல்வேறு தொழில்துறை வாய்ப்புக்கள் போன்ற சகல முன்னேற்றங்களுக்கும் எந்தவிதமான குதர்க்கங்கள் குறைபாடுகள் இல்லாமல் படைத்தவனின் பங்களிப்பில் பாரபட்சம் இல்லாமல் ஆக்கம் கொண்டான்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன் எல்லோரும் இந் நாட்டு மக்களாக உலகம் சம நிலை பெற்று உயர்வு தாழ்வில்லாத ஒற்றுமையாய் உறுதியான வாழ்வு பெறவேண்டும் என்றே இறைவன் உலகத்தை உருவாக்கி நின்றான். ஆனால் இந்த உறுதியான வாழ்வும் ஒற்றுமையான போக்கும் உலக இயல்பில் எவ்விதம் எந்த அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதே இன்றைய நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

பொன்னும் பொருளும் நிறைந்தவர் நெஞ்சம் பொய்யில் வளர்ந்த காடாகவும் ஆசை, கோபம், களவு, கள், காமம் போன்ற பஞ்சமா பாதகங்கள் செய்பவர்கள் பேசத்தெரிந்த மிருகங் களாகவும், உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசி உறுதியற்ற நிலையிலும் வாழ்ந்து வருபவர்களாகவும் காணமுடிகிறது. உள்ளதைச் சொல்லி நன்மையைச் செய்யும் உத்தமர்கள் எவ்வளவுபேர் எம் கூடவே இருந்து வருகிறார்கள். அவர்கள் ஏற்றம் பெறும் வாழ்வையும் உள்ளடக்கி இருக்கிறார்கள். மிருகமாக வாழ்ந்து வரும் பற்பலரும் ஆண்டவனால் அறியப்படுவதற்கு அருகதை அற்றவர்களாகவே கொள்ளப்படுகிறார்கள். எல்லோரும் நல்லவர்களாக நற்பிரஜைகளாக வாழ்வெடுக்க வேண்டும் என்றே ஆண்டவன் மனித சஞ்சாரத்தை அகிலந்தோறும் அடையாளப் படுத்தி இருந்தான். திருந்தாத உள்ளங்கள் திருத்தமாய் வாழ்ந்து வரவும் வருந்தாத உருவங்கள் வருந்தி வாழ்வு தன்னை வளமாக்கவும் ஆண்டவனின் வரவேற்பிற்கும் வரப் பிரசாதங்களிற்கும் பஞ்சமே இல்லை. சூரபத்மனின் வரலாறு இதற்கு உதாரணமாகின்றது.

*சோதனையைச் சாதனையாக்கினால் வெற்றியின் எல்லையை அடையலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவை புரிந்தாரேனும் குமரவேல் திருமுன் உற்றால்
தூயவர் ஆகிமேலை தொல்கதியடைவர் என்ற
ஆயவும் வேண்டும் கொள்ளோ அடுசமர் குன்றாட் செய்த
மாயையின் மகனும் மன்றோ வரம்பிலா அருள் பெற்றும் தான்.

இந்த நிலைப்பாட்டில் ஆண்டவனின் சோதனையே அனைவருக்கும் அந்தரங்கமாய் நிருபணமாகின்றது.

அரசனால் தினமும் உவந்தளிக்கப்படும் மோதகங்களை மக்கள் முண்டி அடித்துக் கொண்டு ஒவ்வொன்றாக எடுத்துச் செல்கையில் பொறுமையும் நேர்மையும் கொண்ட புனிதவதியான கிரிசாம்பாள் என்னும் சிறுமி அமைதியாக நின்று ஈற்றில் கிடைக்கும் சிறிய மோதகத்தை மட்டும் எடுத்துச் செல்லும் வழக்கத்தை கண்ணுற்ற அரசனானவன் ஆண்டவன் சோதனையாக ஒருநாள் அந்தச் சிறிய மோதகத்துள் தங்க மோதிரம் ஒன்றை வைத்து தயார்செய்து இருந்தபோது வழக்கம்போல் அதை எடுத்துச் சென்று வீட்டில் பிரித்தெடுக்கும் போது அதற்குள் இருந்த மோதிரத்தைக் கண்டு திகைத்து உள்ளம் நடுங்கிய கிரிசாம்பாள் உடனடியாக மன்னனிடம் விரைந்து சென்று முறையிடவே அந்தச் சிறுமியின் நிதானத்தையும் நேர்மைத் திறனையும் கண்டறிந்து நீர்வயல்போல் நெஞ்சம் நெகிழ்ந்த மன்னன் அவன் இதெல்லாம் ஆண்டவனால் கிடைக்கப்பெற்ற அருட்பிரசாதமே அன்றி வேறில்லை உனக்கு என்று அன்போடு அவளை அனுப்பி வைத்தான் வீட்டுக்கு.

ஆற்றோரம் விறகு வெட்டி சீவனம் செய்யும் ஒரு ஏழையின் கோடரி ஒருநாள் ஆற்றுக்குள் தவறி விழுந்துவிட்டது. இதனால் அல்லலுற்று அழுதுகொண்டிருந்த அவன் முன் நீரினுள் இருந்து தங்கத்தினால் செய்யப்பட்ட கோடரி ஒன்றுடன் தோன்றிய தேவதை ஒன்று இதுதானா உனது கோடரி என்று கேட்டபோது இல்லை தாயே எனது கோடரி இரும்பினால் செய்யப்பட்டது என்று கூறியதும் பின்பு வெள்ளியினால் செய்யப்பட்ட கோடரி ஒன்றை எடுத்துவந்தபோது அதுவும் எனது அல்ல என்று அந்த விறகுவெட்டி கூறவே அடுத்து எடுத்து வந்த இரும்புக் கோடரியே தன்னுடையது என்ற மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டபோது உண்மையே உயிர் வாழ்வாகக்கொள்ளும் உனக்கு என் நல்லாசிகள் உரித்தாகட்டும் நீயே மூன்று கோடரிகளையும் எடுத்துச் சிறப்புற வாழ்வாயாக என்று அனுப்பி வைத்தது அந்த தேவதை.

சத்தியம் தவறாத உத்தம அயோத்தி மன்னன் அரிச்சந்திரனின் அருமை பெருமைகளை உலகறியச் செய்வதற்காக சூழ்ச்சித் திறமை கொண்ட விசுவாமித்திரர் என்ற முனிவரால் எண்ணற்ற சோதனைகள் சூழ்ச்சிகள் துன்புறுத்தல்கள் நிகழ்த்தப்பட்டன. இதனால் அரிச்சந்திரன் அனுபவிக்காத துன்பமே இல்லை என்றே கூறலாம்.

நாடு நகரை இழந்து மனைவி மக்களை அந்தணனுக்கு விற்று அடிமையாக்கி கடைசியில் தானும் காலகண்ட ஐயரினால் ஆட்கொள்ளப்பட்டு மயானம் காக்கும் பணியில் ஈடுபட்டான். இந்த நிலையில் கொடுமையான சூழ்ச்சிக்கும் சோதனைக்கும் உட்பட்டு மகனையும் இழந்து மனைவியையும் இழக்கும் இறுதித் தறுவாயில் முனிவர் விசுவாமித்திரரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்து நிறுத்தப்பட்டு இழந்ததனைத்தையும் மீளப்பெற்று சத்தியம் தவறாத உத்தமனாக தரணியெங்கும் கொண்டாடப்பட்டு வருபவனானான்.

உண்மையிலும் உண்மையான உறுதியான நிலைப்பாட்டை சற்றேனும் விட்டுக் கொடுக்காத உத்தமர்கள் முன் சோதனைக்கு மேல் சோதனையை உண்டுபண்ணி சோர்ந்து போகும் நிலையும் இறைவனின் இயல்பாற்றலில் இருக்கத்தான் செய்கிறது. இருக்கவேண்டியதும் ஒன்றாகியே விடுகிறது.

## தரிசனம் தருவாய்

*பல்லவி*

இருள் சூழ்ந்த எம் வாழ்வில் ஒளியூட்டுவாய் - வரும்
இடர்களைத் தீர்த்துமே நல் வழி காட்டுவாய். (இருள்)

*அநுபல்லவி*

அருள்மேவும் சந்நிதியில் ஆலயம் கொண்டாய்! - முருகா
அண்டி வரும் எங்களுக்கு அபயம் அளிப்பாய்! (இருள்)

*சரணம்*

வேண்டும் அடியவர்தம் வினைகளை வேரறுப்பாய்! - நல்ல
வெற்றிகளைத் தந்துமே வாழ்வில் உயர வைப்பாய்!
ஆண்டியின் கோலமதில் பழநியிலே அமர்ந்தாய்!
அடியவர்க்கு எளியவனாய் காட்சியும் தருவாய்!
(இருள்)

பூவரச மரத்தடியில் புண்ணியனே இருப்பாய்! - நினைப்
பூசிக்கும் அடியவர்க்கு ஆசிகள் வழங்கி நிற்பாய்!
நாவார நினைப்பாட நற்றமிழைக் கொடுப்பாய்!
நாயகனாய் வந்து தரிசனம் நீ தருவாய்! (இருள்)

-கி. குலசேகரன்.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செப் | 20 | புர | 04 | சனி | அருநந்தி சிவாச்சாரியார் |
| செப் | 24 | புர | 08 | புதன் | சங்கரபண்டிதர் |
| ஒக் | 05 | புர | 09 | ஞாயிறு | கடையிற் சுவாமி |
| ஒக் | 22 | ஐப் | 05 | புதன் | மெய்கண்டதேவர் |

*மனிதன் சிரிப்பது மற்றவர்களைப் பார்த்து. அவன் அழுவது தன்னைப் பார்த்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் கொடிமரம் எப்படி வந்தது

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

பாரதப்போர் முடிந்துவிட்டது. பாண்டவர்கள் அஸ்தினாபுரத்தை நல்லமுறையில் ஆட்சி செய்து வந்தனர். பாண்டவர்களில் மூத்தவரான தருமர் நிறைய தான தர்மங்கள் செய்து வந்தார். அவருக்கு இந்த உலகிலே தன்னைவிட தான தருமம் செய்பவர் எவருமே இருக்கமுடியாது என்ற கர்வம் பிறந்தது. அந்த கர்வம் தானே உலகத்தில் சிறந்த நீதிமான் என்ற எண்ணத்தைக் கொடுத்தது.

இதை உணர்ந்த கிருஷ்ணர் தர்மரின் கர்வத்தை அகற்ற அவருக்கு நல்ல பாடம்புகட்ட வேண்டுமென எண்ணினார். உடனே தருமரிடம் சென்று "நீ ஒரு அசுவமேத யாகம் செய். அது நாட்டிற்கு மேலும் பல நன்மைகள் வழங்கும்" என்று கூறினார். அசுவமேதயாக குதிரை மற்ற பாண்டவர்களுடன் பாரத தேசத்தை வலம் வரத்தொடங்கியது. பாண்டவர்களின் பராக்கிரமம் அறிந்த பல மன்னர்கள் தருமரின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் அசுவமேதயாகக் குதிரை மணிப்பூர் ராஜ்ஜியத்தை அடைந்தபோது நிலைமை மாறியது. அந்த ராஜ்ஜியத்து அரசனின் பெயர் மயூரதத்துவஜன் அவன் சிறந்த கிருஷ்ண பக்தன் ஆவான். அவனுக்கு அசுவமேதயாகக் குதிரை கிருஸ்ணர் ஆதரவைப் பெற்ற பாண்டவர்களுடையது என்பது நன்கு தெரியும். ஆனாலும் அவனுக்கு தன்னுடைய ராஜ்ஜியத்தை விட்டுக்கொடுக்க மனம் இல்லை. எனவே குதிரையை தடுத்து நிறுத்தினான். மயூரத்துவஜனின் மகன் பாண்டவர்களோடு போரிட்டு அவர்களைச் சிறைப்பிடித்தான்.

இந்தச் செய்தியை அறிந்து கிருஷ்ணரும் தருமரும் மணிப்பூர் விரைந்தனர். அப்போது கிருஷ்ணர் "உன்னால் மயூரத்துவஜனை தோற்கடிக்க முடியாது. எனவே நாம் மாறுவேடத்தில் செல்வோம் என்று தருமரிடம் கூறினார். பின்னர் இருவரும் அந்தணர் வேடம்பூண்டு மயூரத் துவஜனை சந்தித்தனர். அந்தணர் வேடத்தில் இருந்த கிருஷ்ணர் "அரசே... காட்டுவழியாக இங்கே வரும் வழியில் ராட்சசன் ஒருவன் எனது மகனைப் பிடித்துக்கொண்டான். அந்த ராட்சசனுக்கு சரிபாதி உடல்தான் வேண்டுமாம். என் மகனை அவன் சாப்பிடாமலிருக்க சரி பாதி மனித உடலுடன் சென்றால் எனது மகனை மீட்க முடியும் என்றார். அதோடு உன் உடலை உன் மனைவியும் உன் மகனும்தான் சரிபாதியாக வெட்டவேண்டும் என்றார்.

மயூரத்துவஜனும் அதற்கு சம்மதம் தெரிவித்தான். அப்போது அவனது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. கண்ணீருடன் தானம் எங்களுக்குத் தேவையில்லை என்றார் கிருஷ்ணர். அதற்கு மயூரத்துவஜன் மன்னிக்கவேண்டும் வேதியர்களே... என்னுடைய உடலின் ஒரு பாகம்தானே பயன்படப்போகிறது. மற்றொரு பாகம் எவருக்கும் பயனின்றி போகப்போகிறதே என்பதை நினைத்துத்தான் என் கண்கள் கலங்கின என்று தெரிவித்தான்.

இதைக்கேட்ட தருமரின் ஆணவம் அழிந்தது. தான் இதுவரை செய்துவந்த தானமும் தருமமும் இவன் முன்பு ஒன்றும் இல்லை என்று தருமர் நினைத்து வருந்தினார். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணர் தனது சுய உருவத்தைக் காட்டி விஸ்வரூபமாக மயூரத்துவஜனுக்கு தரிசனம் அளித்தார். மேலும் கடவுளை வணங்கும் இடங்களில் நீயும் உன் மனைவியும் உன் மகனும் த்வஜஸ்த் தம்பம் (கொடிமரம்) ஆக இருப்பீர்கள். கோவிலில் உள்ள தெய்வத்தை வணங்கு வதற்கு முன்பாக அனைவரும் உங்களை வணங்குவார்கள் என்ற வரத்தை அருளினார்.

கொடிமரமானது ஜீவதாறு (உயிர் உள்ள மரம்) என்ற மரத்தில் செய்யப்படுகிறது. அது தாமிரம் தங்கத் தகடுகளால் மூடப்பட்டு ஆகம விதிப்படி சில சிற்பங்கள் செதுக்கப் படுகிறது. கொடிமரத்தின் மேலே மூன்று உலோக அடுக்குகள் அமைக்கப்படுகின்றன. அதன் பெயர் மேகலா ஆகும். அந்த மூன்றும் பூமி அண்டம் சொர்க்கம் ஆகியவற்றை குறிப்பதாகும். அதில் பாலி என்ற சிறு மணி இருக்கும். கொடிமரத்தின் உச்சியில் மயூரத் துவஜனை நினைவுகூரும் வகையில் ஆகாசதீபம் என்ற சிறிய விளக்கும் இருக்கும். கொடி மரத்தில் ஏற்றப்படும் கொடிக்கு "த்வஜபடம்" என்று பெயர். அந்தக் கொடியில் நந்தி கருடன் அல்லது திரிசூலம் போன்றவை குறிக்கப்பட்டு இருக்கும். கொடியேற்றுதலை "த்வஜ ஆரோகணா" என்றும் கொடி இறக்குவதை "த்வஜ அவதை" என்றும் சொல்வார்கள். கொடிமரத்தை சுற்றாமல் கோவில் பிரதட்சணம் நிறைபெறாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

---

## அரசனும் துறவியும்

ஒரு மன்னர், கங்கைக் கரையில் ஒரு துறவியைப் பார்த்தார். துறவியிடம் ஒரு கௌபீனமே இருந்தது. அவர் ஆனந்தமாகவும், உற்சாகமாகவும் இருந்தார். அரசர் ஆச்சரியத்தில் ஆழ்ந்துபோனார்.

ஏராளமான பொன்னும் பொருளும், நாடு நகரம், மக்கள் என செல்வாக்கும் உள்ள தன்னைவிட கௌபீனத்தை மட்டுமே கொண்டிருக்கும் ஆண்டி ஆனந்தமாக இருப்பது வியப்பை ஏற்படுத்தியது அவருக்கு.

பணிவோடு துறவியை நெருங்கிய அரசர், "சுவாமி! தங்கள் மகிழ்ச்சிக்குக் காரணம் எது? உங்களிடம் கஜானாவோ ராணுவமோ இல்லையே!" என்று கேட்டார்.

துறவி பதிலளித்தார். "எனக்கு ஆசையே இல்லை. அதனால் கஜானா இல்லை. எதிரிகள் இல்லாததால் படைபலமும் தேவையில்லை" என்றார்.

"உங்களுக்கு மனைவி மக்களோ; ஏன் அரண்மனையோகூட இல்லையே!" என்றார் மன்னர்.

"இந்த உலகமே எனது அரண்மனை. அமைதி எனது அழகிய மனைவி. பிரம்ம ஞானம் எனது மகன்" என்றார் துறவி.

துறவியின் பதிலைக்கேட்ட மன்னர், மனம் மாறியது. அவர் தனது அரசைத் துறந்தார். துறவியின் சீடனாக ஆனார்.

"பற்றற்ற தன்மையும், துறவுமே ஒரு மனிதனைச் சக்கரவர்த்தியாக ஆக்குகிறது".

நமது புத்திசாலித்தனத்தை எப்படி மறைத்துக்கொள்வது என்பதே பெரிய புத்திசாலித்தனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

(தொடர்ச்சி...

## அத்தியாயம் - 16

## புருஷோத்தமன்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

### 07) அகங்காரம்

எமக்கு நாமே ஒரு பொருளாக இருப்பதில்லை என்பதால் நாம் எமது அகங்காரத்தை நீக்கமுடியாமல் இருக்கின்றோம். நாம் பொருள்களைக் கையாளவே பழக்கம் உள்ளவர்கள் ஆனால், நாம் எம்மையே பொருளாகக் கருதுவதில்லை. அதனாலேதான் எமது அகங்காரத்தை ஏதாவது ஒரு வழியில் கையாள முடியாதவர்களாக இருக்கின்றோம். நாம் விவரிக்கமுடியாத கடினமான ஒரு விடயமாகவே உள்ளோம். எமது துன்பங்களுக்கான மூலம் நாங்களே அன்றி வேறெவையும் இல்லை. வேறெவரும் எமக்குத் துன்பத்தைத் தரமுடியாது. தனது நூலால் தன்னை அடைத்துக்கொண்டுள்ள பட்டுப்புழுப்போல நாம் எமது ஆசைகளினால் எம்மைக் கட்டி வைத்திருக்கின்றோம். அகங்காரம் என்ற மையத்தைச் சுற்றி ஆசைகள் என்ற நூலால் நாம் எம்மையே கட்டி வைத்திருக்கின்றோம். எமது ஆன்மாக்களில் இருந்து வளரும் தெய்வீக ஞானம் இன்றிப் பற்றின்மை சாத்தியம் இல்லை. பற்றின்மை அல்லது வைராக்கியத்துக்கு முதலில் தேவையாவது, எது உண்மை எது பொய் என்ற விவேகம் ஆகும். ஒருவர் தன்னோடுள்ள மற்றப் பொருள்களின் தன்மையைப் புரிந்துகொண்டால் அன்றி அவர் அவற்றின் பற்றில் இருந்து விலக முடியாது. பற்று, பற்றின்மை என்ற இரண்டும் புரிந்துகொள்வதற்கு கடினமானவை. ஏனெனில் அவ்விரு வார்த்தைகளின் அனுபவங்களுக்கு இடையே உள்ள தொடர்பை வேறுபடுத்தி அறிவது கடினம். பற்று, பற்றின்மை என்ற இரு மனப்பாங்குகளுக்கு இடையே உள்ள பரஸ்பர உறவைப் புரிந்துகொள்ளாததால் ஒருவர் ஒரு பொருளைப் பற்றுகின்றார் அல்லது அதனை விலக்குகின்றார்.

### 08) பிரச்சினைகளின் மறைவு

அறிவு உதயமானதும் எல்லாவகை உறவுகளும் தாமாகவே அற்றுப்போகின்றன. மிக உயர்ந்த பற்றின்மை என்பது உள்ள எதனையும் விலக்குவது அன்று. அகம், புறம் அவை இரண்டுக்கும் இடையே உள்ள உறவு என்ற யாவற்றினதும் உண்மையின் பரந்த பண்பை உணருவதற்கு ஒருவர் தன்னை உயர்த்துவதே பற்றின்மை ஆகும். கீதை காட்டும் பற்றின்மை அநாசசக்தி ஆகும். அது மனிதனுடைய சாதாரணமான ஒழுக்க மனப்பான்மை அன்று. அது எங்குமுள்ள படைப்பவனை அறியும் ஞானமலர்ச்சி. அது

*மனச்சாட்சி இறப்பரைப் போன்றது. அதை வளைக்கலாம் ஆனால் ஒடிக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஆசைகளுக்கும் ஒரே நேரத்தில் விழும் ஒரு மரணஅடி. அதனால், அதற்காக நாம் மேலும் எதனையும் செய்யவேண்டிய தேவை இருக்காது. நாம் கனவில் இருந்து விழித்து எழும்போது புற உலக அறிவுக்கு இயல்பாக வருகின்றோம். எமது கனவின் துயரங்களும், ஆவல்களும் அப்போது எந்தவிதமான முயற்சியும் இல்லாமல் தாமாகவே மறைந்து விடுகின்றன. இவ்வுலக உண்மைக்கு நாம் விழித்து எழும்போது கனவு நீங்கி உயர்ந்த அறிவோடு இருப்போம். ஆதலால் அக் கனவுப் பிரச்சினைகளை வெற்றிகொள்ள எமது போராட்டம் தேவையில்லை. அந்த அறிவே கனவு உலகத் தேடுதலுக்கான சர்வ ரோக நிவாரணியாக அமைகிறது. இதனால் கனவுலகப் பிரச்சினைகளை வெற்றிகொள்ள எமது பக்கத்தில் இருந்து வேறு புற முயற்சிகள் எவையும் தேவையில்லை. கனவு நீங்கி விழிக்கும்போது உள்ள அறிவு, கனவு விருப்பு வெறுப்புக்களை மறையச் செய்கிறது. அதுபோலக் கடவுள் சந்நிதானத்தில் வாழ்க்கைப் பிரச்சினைகள் மறைகின்றன. இந்த அனுபவத்தைக் காட்டிலும் எந்தப் பற்றின்மை பெரிதாக இருக்கமுடியும்? இங்கே ஒரு விழிப்புணர்வு ஆத்மா இடத்தில் எழுகிறது. அதனால் அங்கே ஆசைகளுக்கு எதுவித அர்த்தமும் இருக்கமுடியாது. தளை என்னும் மரத்தை வெட்டி வீழ்த்தப் பற்றின்மை என்னும் கோடரியை உபயோகிக்கும் தேவைபற்றிக் கீதை கூறுகிறது. அப்போது உண்மையில் கடவுள் பற்றிய அறிவையே அது குறிப்பிடுகின்றது. கடவுள் பற்றிய அறிவை அறிந்து அதனை அனுபவித்ததும் மீண்டும் பிறப்பு இறப்புக்களுக்குத் திரும்ப வேண்டியதில்லை.

## 09) அறிவு உதயம்

கடவுள் பற்றிய அறிவு உலகில் சூரியனோ, சந்திரனோ, நட்சத்திரங்களோ பிரகாசிப்பதில்லை. அங்கே நாம் ஒளி என்று இவ்வுலகில் கூறுகின்ற எதுவும் இல்லை. இந்த உலகில் ஒளிகள் என்று நாம் கருதுவன எல்லாம் அத் தெய்வ ஒளியின் நிழல்களே. அந்த ஒளியைச் சென்றடைந்ததும் நாம் இந்த உலகுக்கு மீண்டும் வரவேண்டியதில்லை. அதன் பின் எமக்கு மறுபிறப்பும் தற்காலிக வாழ்வும் இருக்காது. நாம் அதன் பின்பும் புளிப்பழங்களை அறுவடை செய்யமாட்டோம். அப்போது நாம் எங்கும் நிறைந்த உண்மை ஆகுவோம். என்றும் இறவாத நிலையை அப்போது நாம் பெறுவோம். பின் இந்த உலகத்துக்குத் திரும்பமாட்டோம். கனவுலகில் செய்து முடிக்காத வேலையை நிறைவேற்றுவதற்காக நாம் கனவுக்குத் திரும்பிப் போகவேண்டும் என்ற ஆவல் எம்மிடம் இருக்காது. கனவு உலகில் நாம் ஒருவரிடம் இருந்து கடன் வாங்கி இருந்தால்கூட நாம் கனவைவிட்டு எழுந்தபின் தீர்க்கவேண்டி இருக்காது. அதற்கான கொடுப்பனவு ஆக விழிப்பு அறிவு அமைகிறது. கனவு உலகச் சகல கொடுப்பனவுகளுக்கும் தீர்வாக அமைவது அந்த அறிவே. அதுபோலவே தெய்வீக அறிவு உதயமானதும் இந்த உலகத்துக்குத் திரும்ப வேண்டும் என்ற வினா எழாது. கனவில் இருந்து விழித்தவன் எவ்வாறு கனவு உலகத்துக்குத் திரும்பிப்போவது இல்லையோ அவ்வாறே தெய்வீக அறிவு உதித்ததும் இவ்வுலகுக்கு வரவேண்டியதில்லை. கடவுளுடைய புகழும், பெருமையும் ஆற்றலும் அவ்வாறு உயர்ந்ததாகும்.

*காரணம் இல்லாது கோபம் வராது. ஆனால் அந்தக் காரணம் நியாயமாய் இருப்பதுதான் அபூர்வம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதையின் பதினைந்தாவது அத்தியாயத்தின் ஆரம்பப் பகுதியை நாம் வாசிக்கும்போது அங்கே உள்ள உற்சாகம் அளிக்கும் வார்த்தைகளின் உள்ளார்ந்த அர்த்தம் இந்த அறிவு உதயமே.

## 10) புருஷோத்தமன்

கீதையின் வார்த்தைகளில் மேலான இறைவன் புருஷோத்தமனே. புருஷன் என்றால் பிரக்ஞை என்பதே சாங்கிய தத்துவ அடிப்படையில் நாம் அறிந்து வைத்திருக்கும் கருத்து. புருஷன் சடப்பொருளான பிரகிருதிக்கு மாறாகப் பார்க்கின்ற ஒரு பொருளாகும். புருஷன், பிரகிருதி என்ற இரண்டு உண்மைகள் அல்லது தத்துவங்கள் தாமாகவே உள்ளன என நாம் கருதுகின்றோம். அவற்றை அறிபவன் - அறியப்பட்டது என்றும், புருஷன் - சடம் என்றும், பார்ப்பவன் - வெளியே உள்ள பிரபஞ்சம் என்றும் முறையே அழைக்கின்றோம். அவை இரண்டும் முறையே அழியாத அக்ஷரம், அழியும் க்ஷரம் ஆகக் கொள்ளப்படுகின்றது. ஆனால், அவை இரண்டையும் கடந்து, அவை இரண்டையும் புரிந்து, அவை இரண்டையும் தான் என உணர்வது புருஷோத்தமன். அது எல்லாப் புருஷர்களுக்கும் மேற்பட்ட உயர்ந்த புருஷன். புருஷர்களை அனுபவப் பிரக்ஞைகளாக நான், நீ மற்றும் ஒவ்வொருவராகத் தனித்தனி மனிதராக இவ்வுலகில் பார்க்க முடியும். இப் பிரபஞ்சம் முழுவதும் புருஷோத்த மனால் நிரம்பி உள்ளது. எனவே, இந்த முழுப்பிரபஞ்சத்திலும் ஒரு புருஷன் மட்டுமே இறுதியில் உள்ளது. எல்லாத் தலைகளும் அப் புருஷனின் தலைகளே. எல்லாக் கண்களும் அப் புருஷனின் கண்களே. எல்லாக் காதுகளும் அப் புருஷனின் காதுகளே. ஒவ்வொருவரது தலையும், எண்ணங்களும், செயல்களும் அப் புருஷனது தலை, எண்ணம், செயல் என்பனவே. அப் புருஷனை விட வேறு யாரும் எதனையும் செய்வதில்லை. அப் புருஷன் இன்றி எவராலும் சிந்திக்கவோ, உயிர் வாழவோ முடியாது. அந்த அற்புதமான மாபெரும் இருப்பைத் தவிர வேறேதும் இல்லை. "எந்தச் சூழ்நிலையின் கீழும், எவ்விடத்திலும், எது இருக்குமோ அது அந்தப் புருஷன் மட்டுமே" என்பது பழைய என்றுமுள்ள வேதத்தைத் தமது காட்சியில் கண்ட ஞானிகளின் அறிவிப்பாகும். அந்தப் புருஷனுக்கு உள்ளேயே சமுத்திரத்துள் ஆறுகள் ஒன்றாவதுபோல ஏனைய புருஷர்கள் ஒன்றாகின்றனர். அந்த ஒப்பற்ற புருஷனில் தனிமனிதனோ, சடமோ அல்லது அகமோ, புறமோ என்று எதுவும் இல்லை. அங்கு பிரிபடாத ஒன்று எல்லாவற்றையும் அடக்கி இருப்பதாகச் சமுத்திர அனுபவம் போல உள்ளது. இந்தப் புருஷோத்தமனை அறிகின்ற ஒருவர் உடனடியாகவே வீடுபேற்றை அடைகின்றார். அறிவு என்பதும், வீடுபேறு என்பதும் ஒரே விடயமே.

## 11) புற அறிவு

நாம் இங்கே குறிக்கின்ற அறிவு எவ்வகையானது என்று அறிவது மிகக் கடினம். நாம் அறிவைப்பற்றிப் பேசும்போது பொதுவாகக் கற்றலோடு அதனை அடையாளப்படுத்திக் கொள்கின்றோம். அதாவது உலகில் உள்ள இலக்கியம், இசை முதலான கலைகளோடும்,

வாக்குறுதி ஒரு நிலவு போன்றது. உடனே நிறைவேற்று அல்லது தேய்ந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம், பௌதிகம், இரசாயனம், உயிரியல், வானவியல் முதலான விஞ்ஞானங்களோடும் அறிவை அடையாளப்படுத்திக் கொள்கின்றோம். இவை யாவும் இவ்வுலகில் எமக்குத் தெரிந்த அறிவு வகைகளாகும். ஆனால் இந்தக் கற்றல் வடிவங்களுக்குப் பின்னால் மறைந்துள்ள புதிரான உண்மைகளுக்கு நாம் வழங்கும் பெயர்களே இவையாகும். எல்லாக் கற்றலுக்கும் வெளியே உள்ள வடிவங்களை விருத்தி செய்ய நாம் முயலும் ஒரு பழக்கம் மட்டுமே. பொருள்களை அவை உள்ளபடியே அறிவது எமது புரிந்துகொள்ளும் ஆற்றலுக்கு அப்பால் உள்ளது. எனவே, எமது அறிவு உண்மைக்கு மேலுள்ள ஓர் ஓடே. நாம் உமியைப் பிடித்துக்கொண்டு அதனை உலகிலுள்ள ஞானம் என்கின்றோம். வெளியே சிலவற்றின் புறவடிவங்களோடு ஒரு தோற்றப்பாட்டுத் தொடர்பை மட்டுமே நாம் கொண்டிருக்கின்றோம். ஆனால் அவைபற்றிய சரியான விளக்கம் எம்மிடம் இல்லை. அத்துடன் உண்மையில் அவற்றுள் நுழைய முடியாதவர்களாக நாம் இருக்கின்றோம். உலகிலுள்ள பொருட்களைப் பற்றிய எமது முறையான அறிவுகூட நம்பமுடியாத ஓர் அறிவே. முதலாவதாக, ஒரு பொருளின் அது உள்ளபடியே உள்ள அறிவு எம்மிடம் இல்லை. நாம் வடிவங்கள், பெயர்கள் அவற்றின் சிக்கலான தன்மை என்பவற்றோடு ஒரு பழக்கம் மட்டுமே கொண்டுள்ளோம். அந்தச் சிக்கலான தன்மை ஒரு பொருளின் புற அம்சங்களோடு தொடர்பானதாய் அமைந்துள்ளது. ஆனால் அந்தப் பழக்கம்கூட இறுதியில் தவறானதே. ஏனெனில் அந்தப் பழக்கம் எமது புலன் கருவிகள், மனம், புத்தி என்பவற்றின் அமைப்பில் தளைப்பட்டுள்ளது. எனவே, எதனைப்பற்றியும் பெறுமதிவாய்ந்த அறிவு எம்மிடம் இல்லையென்றே கூறலாம். நாம் உலக ரீதியாக அறிவு உள்ளவர்கள் என்று கற்பனை செய்துகொண்டு எதுவும் தெரியாத அறியாமை என்ற இருளில் தள்ளாடியபடி நடக்கின்றோம்.

## 12) தளையற்ற அறிவு

அறிவே ஆன்மாவின் வீடுபேறு அல்லது விடுதலை என்று கூறுகின்றோம். அப்போது நாம் அந்த உலக அறிவைக் குறிப்பிடுவதில்லை. இந்த அறிவும், கடவுள் பற்றிய அறிவும் ஒன்றே. அறிவு என்பது இருப்பில் அது உள்ளவாறே இருப்பதாகும். எல்லாவற்றின் இருப்புக்கு உள்ளும் எமது உண்மைத்தன்மையின் நுழைவே அந்த இருப்பாகும். காண்போனது இருப்பே காணப்படும் பொருள்களின் இருப்பாக உள்ளது. இந்த வகையில் பார்ப்பவனும் பார்க்கப்படும் பொருளும் அந்த இருப்பில் ஐக்கியம் ஆகின்றன. அங்கே கடவுள் எங்களுள்ளும் நாங்கள் கடவுள் உள்ளும் நுழைகின்றோம். அது ஆறுகள் சமுத்திரத்துள் நுழையச் சமுத்திரம் அவற்றை அணைத்துக்கொள்வது போன்றது எனவே, ஒருவரால் எது ஆறு, எது சமுத்திரம் என்று அறியமுடிகிறது. எல்லா ஆளுமைகளுக்கும், வடிவங்களுக்கும் மேலாக உள்ள புருஷோத்தமனை அடையும்போது ஆத்மாவின் விதி அவ்வாறு அமைகிறது. அதனை அறிந்து ஒருவர் வீடுபேறு அடைகின்றார். அப்போது அங்கே மேலும் தளைக்கான தடயமோ, சந்தர்ப்பமோ இல்லை. (தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி அமாவாசை

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

## விரதம் என்பது தவம்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்குரு"
-திருக்குறள்.

இதுவே தவம் என்பதற்குத் திருவள்ளுவர் தரும் வரைவிலக்கணம். தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்ளலும் சகித்துக்கொள்ளலும், பிற உயிர்களைத் துன்புறுத்தாமல், அஹிம்சை தர்மத்தைக் கடைப்பிடித்தலும் என்னும் இரண்டுமே தவம் என்பதன் வடிவம் ஆகும். என்பது இக்குறள் தரும் கருத்து. அஹிம்சை தர்மத்தைக் கடைப்பிடிப்பதால் உலகியல் தர்மத்தை, சீராக்கம் செய்ய முடியும். புலால் உண்ணாமல், சைவ உணவினை உண்பவர், சிறந்த தர்மத்தை வாழ்வில் பேணி வருபவர் ஆகிவிடுகின்றார். புண்ணியம் சேர்ப்பதற்கு இத் தர்மத்தை வாழ்வில் கடைப்பிடித்து வந்தாலே போதும். அத்தகைய ஆற்றல் நிறையப் பெற்றவர்களுக்குக் "கூற்றம் குதித்தலும் கைகூடும்" என்கிறார் திருவள்ளுவர். "பொய்யாமொழிப் புலவர்" என்பது திருவள்ளுவரின் சிறப்புப் பெயர் ஆகும்.

விரதம் என்பது, "பிரதிக்ஞை"யும் ஆகும். விரத காலங்களில் விதிக்கப்பட்டவற்றைச் செய்தலும் விலக்கப்பட்டவற்றை, செய்யாதிருத்தலும்" பொதுவிதி. விரதங்கள் சமய ரீதியாக மட்டுமன்றிச் சமூகநல ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. விரத காலங்களில், விதிக்கப்பட்டவற்றைச் செய்தலும் "விலக்கப்படாவற்றைச் செய்யாது தவிர்த்தலும்" என்பது தீர்மானமாக உள்ளது. அதன்மூலம், உடல், உள, சமூக ரீதியாக நன்மைகள் பல ஏற்படுகின்றன.

சைவ சமயத்திலும் பல விரதங்கள் விதிக்கப்பட்டுள்ளன. விநாயகர், சிவன், அம்பாள் (சக்தி), முருகன், வைரவர், விஷ்ணு முதலிய தெய்வங்களைக் குறித்து அநுட்டிக்கப்படுகின்ற விரதங்கள் என்றும், தெய்வநிலையை எய்திவிட்ட தந்தை, தாய் ஆகியோரை நினைவு கூர்ந்து அவர்கள் நல்ல கதி அடைவதற்குப் பிரார்த்தித்து மேற்கொள்ளப்படும் விரதங்கள் என்றும் அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அமாவாசை, பூரணை (பௌர்ணிமை) ஆகிய இரண்டு விரதங்களும் முறையே காலமான தந்தை, தாய் ஆகியோரைக் குறித்து அவர்கள் நற்கதியடையப் பிரார்த்தித்து அவர்களின் புத்திரர்களால் அநுட்டிக்கப்படும் விரதங்கள் ஆகும். ஒவ்வொரு மாதமும் இவ்விரதங்களுக்குரிய, தினங்கள் வருகின்றன. பஞ்சாங்கம் பார்த்து அப்புனித தினங்களை அறிந்து கொள்ளலாம்.

இவ் விரதங்களை அநுட்டிப்பவர்கள், ஆசார சீலர்களாக உபவாசம் இருந்தும், அவ்வாறு இருக்கமுடியாதவர்கள் ஒருபொழுது உணவு உண்டும் விரதம் அநுட்டிப்பர். இத்

நாஸ்திகன் நம்பிக்கை அற்றவன். ஆனால் நம்பிக்கை அற்றதில் நம்பிக்கை உள்ளவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினத்தில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடித் தூய்மையராய், பிதிர் தர்ப்பணம் செய்தும் பிண்டதானம், சிரார்த்தம் செய்தும் இறைவனை, வழிபாடு செய்தும் அந்தணர்களுக்குத் தானம் வழங்கியும் மற்றும் உறவினர், விருந்தினர், ஏழைகள், ஆதரவற்றவர்கள் ஆகியோருக்கு உணவு அளித்தும் அவர்களுடன் போசனம் செய்தும் புனிதம் பேணி இருப்பர். மாமிச உணவு, தவிர்ப்பர். தாவரபோசனம் மட்டுமே உண்பர்.

சித்திரை மாதத்தில் வருகின்ற பூரணையும் ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசையும் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. தை அமாவாசையும் சிறப்பு வாய்ந்தது என நூல்கள் கூறும்.

இனி ஆடி அமாவாசையின் சிறப்புப் பற்றிப் பார்ப்போம். இந்துக்கள் ஒரு வருடத்தை இரண்டு அயனங்களாக வகுத்துள்ளனர். தை மாதம் தொடக்கம் ஆனி இறுதிவரை உள்ள ஆறு மாதங்கள், உத்தராயண காலம் என்பர். உத்தராயணம், ஆறு மாதங்களும் தேவர் களுக்குப் பகல் காலம் ஆகும். ஆடி மாதம் தொடக்கம் மார்கழி இறுதி வரை தட்சணாயண காலம் என்பர். இக் காலம் தேவர்களுக்கு இரவு காலம் ஆகும்.

தட்சணாயனத்தின் தொடக்க மாதம் ஆடி மாதம் ஆகும். மார்கழி அதன் இறுதி மாதம். இக் காலப்பகுதி தேவர்களுக்கும் பிதிர்லோகத்தில் சஞ்சரிக்கும் பிதிர்களுக்கும் இராக்காலம் ஆகும்.

ஆடி அமாவாசையில் பிதிர் வழிபாடு செய்தல், தர்ப்பணம், பிண்டதானம் நிறைவேற்று தல் என்பன நிறைவேற்றப்படுதல், புத்திரர்களின் கடமையாகும். இவற்றிற்குரிய விதிமுறைகள் அனைத்தையும் நமது இருடிகள் எழுதி வைத்துள்ளனர். பராசரர், மனு, விகிதர், சாதா தபர் போன்ற இருடிகள் எழுதி வைத்தவைகள் அனைத்தையும் சேர்த்து "தர்ம சாஸ்திர நிபந்தனம்" எனும் கிரந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அதனை ஆதாரமாகக் கொண்டே இந்துக்களின் கர்மானுஷ்டானங்கள் நடக்கின்றன.

ஆடி அமாவாசையன்று புத்திரர்களினால் தம் காலமான பெற்றோர்களுக்குச் செய்யப்படுகின்ற தர்ப்பணம் மற்றும் சிராத்தம்மூலம், அன்புக் காணிக்கையை, அவர்களுக்குச் செலுத்துகிறோம். அவர்களின் ஆசீர்வாதங்களும் பாதுகாப்பும் எமது நல்வாழ்வுக்கு இன்றி யமையாதன. எமது சைவ சமயத்தின் விதி முறைப்படி, தெய்வத்தை நேராக வழிபட்டு, அநுக்கிரகம் பெறும் முறை இல்லை.

சந்திரனுக்கு மற்றொரு பெயர் "மதி" என்பதாகும். சந்திரன், மனிதர்களின் மனங்களை ஆட்சி செய்கின்றது. அதனால் மனித மனங்களுக்கு "அதிபதி"யாக விளங்குகின்றது.

மனித மனங்களுக்கு "மதி"யைத் தருவதும் மாற்றங்களை ஏற்படுத்துவதும் மதியின் செயல் ஆகும். சந்திரன் அத்துணை முக்கியத்துவம் பெறுகிறது.

சூரிய சந்திரர்கள், நமக்குப் பிரத்தியட்சமாகத் தோன்றும் தெய்வங்கள் ஆகும். அத்தகைய சிறப்புவாய்ந்த சூரிய சந்திரர்கள் ஒன்றிணைந்து ஓர் இராசியில் சஞ்சரிக்கும் புனித தினம் அமாவாசை ஆகும். பூமியில் உள்ளவர்களைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு அமாவாசையும் புனித நாளேயாகும். பூமியில் வசிப்பவர்களைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு அமாவாசையும் பிதுர்கருமங்கள் செய்வதற்கு ஏற்ற நாளாகும். அதாவது தென்புலத்தார்

*மறதியின் உதவியால்த்தான் நாம் திரும்பவும் வாழப் பழகிக்கொள்கிறோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு செய்தவற்கு ஏற்புடைத்தது. சூரிய மண்டலத்திற்கு அப்பால் பல காத தூரத்தில், பிதுர்கள் உறையும் பிதுர் உலகம் உள்ளது. எனக் கற்றறிந்து மூதறிஞர் வாயிலாக அறிய முடிகிறது. பிதுர்களைத் "தென்புலத்தார்" என்று திருவள்ளுவர் வாயிலாக அறியக்கிடக்கிறது. இல்வாழ்வானின் கடமைகள் பற்றிக் கூறவந்த திருவள்ளுவர்

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்
தான் என்று ஆங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" -திருக்குறள் 43.

திருவள்ளுவர் தென்புலத்தார் (இறந்த ஆன்மாக்கள்) வழிபாட்டின் இன்றியமையாமை பற்றி மேற்படி குறட்பாவில் வலியுறுத்திக் கூறியுள்ளமை நோக்கற்பாலது.

மனிதர்கள், அறியாமை காரணமாகத் தெரியாமல் செய்கின்ற குற்றங்களுக்குப் பிராயச்சித்தம் உண்டு. அபுத்திபூர்வமாகச் செய்யப்பட்ட அத்தகைய குற்றங்களுக்கு, இறந்த பின்பு, அவர்களுக்குப் பிள்ளைகளால் செய்யப்படுகின்ற தகனக்கிரியை: அதன்பின் செய்யப்படுகின்ற சபிண்டிகரணம் அந்தியேட்டி மாதா மாதம் செய்யப்படுகின்ற மாசிமகம் ஓர் ஆண்டு நிறைவேறிய பின் ஆண்டுத் திவசம் பின்பு ஆண்டுக்கொருமுறை செய்யப்படுகின்ற சிராத்தம் (திவசம்) அத்துடன் மாதா மாதம் அமாவாசை (தந்தைக்காக) பூரணை (தாய்க்காக) நோற்றல் மூலம் இறந்த தாய், தந்தையர்கள் ஆத்மசாந்தி பெறுகின்றனர். அவர்களின் உயிர்கள் ஆன்ம ஈடேற்றம் பெறுகின்ற இதுவே, மகன் தந்தை தாயாருக்கு ஆற்றும் மகத்தான உதவி.

இனி திருவள்ளுவர் தரும் திவ்விய கருத்தை நோக்குவோம்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல்" -திருக்குறள் 70.

***அதன் பொருள்:***

தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி கல்வியுடையவன் ஆக்கிய தந்தைக்கு மகன் செய்யும் கைம்மாறு என்னவெனில் "இவன் தந்தை என் நோற்றான் கொல்" எனும் சொல். "தன் தந்தை அம் மகனைப் பெறுவதற்கு, என்ன தவம் செய்தான். "சொல்" எனப் பிறர் சொல்லி ஆச்சரியப்படத், தன் நடத்தைமுறைகளைக் கண்டும் பிறர் வாயிலாகப் புகழாரம் சூட்டப்படும்போதும் கேட்டும் அகம் மகிழ்ச்சியடையும் வகையில் நடந்து கொள்வதுதான்" என்பதே இக்குறள் மூலம் வள்ளுவர். தரும் கருத்து. பிள்ளைகள் இக் குறள் தரும் கருத்தைக் கேட்டு, வாழ்வில் கடைப்பிடித்து நடந்தால் இன்பமேயன்றி வாழ்வில் துன்பம் ஏற்படாது. என்பது இக்குறட்பா மூலம் திருவள்ளுவர் வழங்கும் கருத்து.

இவ்வாறு ஒவ்வொருத்தரும் மகன், மகள், தம் தந்தை, தாயாருக்கு ஆற்றும் கடமை, மகத்தான பேருதவியாகும். அப்பொழுதுதான், "இவன் தந்தை எந்நோற்றான், கொல்" எனும் சொல் என்ற வள்ளுவர் வாக்கு மெய்ம்மை பெறுகிறது.

"மைந்தனைப் பெறுகின்றது மாசிலாப்
புந்தியன்பொடு போற்றி வளர்ப்பதும்
தந்தை (தாய்) மாண்டுழித் தம்முறைக்கு கேற்றிட
அந்தமில் கடனாற்றுதற் கன்றோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தனைப் பெற்று, அன்பு மற்றும் பாசத்தோடு வளர்த்தும் கல்வி கற்பித்தும், வாழ்வாதாரம் பெற உதவியும் உறுபொருள் கொடுத்தும் திருமணம் செய்து வைத்தும் "அவை"யிலும் "முந்தி" இருக்கச் செய்வதும், அவற்றுக்கான காரணம் என்ன? என்று நோக்கில் காரணம் உண்டு.

ஆம். தந்தை தாயார் காலமான பின்னர், ஆண்டுதோறும் அவர்களை நினைவு கூர்ந்து, சிராத்தம் செய்வதற்கும் இறுதிக் கடன்களை நிறைவேற்றுவதற்கும் தம் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திப்பதற்கும், பின்னர் அவர்களை நினைவுகூர்ந்து மாதந்தோறும் வரும் அமாவாசை, பூரணைத் தினங்களில் விரதம் அனுட்டிப்பதற்கும் அவற்றின் வழி, இறந்த உயிர்கள் பழவினைகள் நீங்கப்பெற்று; சாந்தி, அமைதி, ஆன்ம ஈடேற்றம் அடைவதற்கும் புத்திரர்களின் புத்திபூர்வமான அறிவுபூர்வமான உதவி தேவை, என்பதற்கேயாகும். "புத்" என்னும் கொடிய நரகத்தில் வீழாது, பெற்றோர்களைக் காப்பாற்றுபவன் ஆதலால் "புத்திரன்" என்னும் பெயர் வந்தது என விளக்கம் தரப்படுகிறது. எனவே ஆடி அமாவாசையின் மகத்துவத்தை உணர்ந்து, அம் மகத்தான தினத்தில் முறைப்படி தென்புலத்தார் வழிபாடு செய்து பெற்றோர்களின் ஆத்மசாந்திக்கு வழி செய்வோமாக.

---

## அனுமனின் அப்பா

ஒருநாள், ரமணர் தம்முடைய பக்தர் ஒருவருக்கு ஆன்ம விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார். பகவான் வெளியே செல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது. இதை நினைவு படுத்த, சேவகர் கையில் தடியையும் கமண்டலத்தையும் பிடித்துக்கொண்டு தயார் நிலையில் இருந்தார்.

இதைக் கவனித்த பகவான் சிரித்துக்கொண்டே, "கொஞ்சம் இருங்கையா! ராம பக்தரான ஆஞ்சநேயரின் தகப்பனார் வந்து என் காலை கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக் கிறார். அவரென்ன சாமான்யப்பட்டவரா? அவ்வளவு சீக்கிரம் விட்டு விடுவாரா? அவரிடமிருந்து மெதுவாகத்தான் விடுபட வேண்டும்" என்று சொல்லிவிட்டு, முழங்காலுக்குத் தைலம் தேய்த்துக்கொண்டு மெதுவாக எழுந்தார்.

ஆஞ்சநேயரின் அப்பா வேறு யாருமில்லை. வாயுதான். முழங்காலை வாயு பிடித்துக் கொண்டுவிட்டது என்பதையே இப்படி சமத்காரமாக நகைச்சுவையுடன் சொல்லி அனைவரையும் சிரிப்பிலாழ்த்தினார் பகவான்.

இப்படி அடிக்கடி பகவான் முழங்காலுக்குத் தைலம் தேய்த்துவிட்டுக் கொள்வதுண்டு. "எண்ணெய் போடலேன்னா இந்த வண்டி (தேகம்) ஓடாது அய்யா!" என்று குறும்பும் கேலியுமாகச் சொல்லிச் சிரிப்பார்.

பகவானின் காலைப் பிடித்துவிட, "நான்", "நீ" என்று பக்தர்களிடையே போட்டி நிலவும். இதைச் செய்வது "புண்ணியம்" என்று அவர்கள் கருதினார்கள். அவர்கள் தன் காலைப் பிடித்துவிடுவது பகவானுக்குச் சங்கடமாக இருந்தது. தனக்குத்தானே செய்துகொள்ள எண்ணினார். ஒருநாள், "கொஞ்சம் இருங்கோ! எல்லாப் புண்ணியமும் உங்களுக்கு மட்டும்தானா? என்னையும் கொஞ்சம் புண்ணியம் சம்பாதிக்க விடுங்கோ" என்றார் ரமணர். அனைவரும் வெட்கத்தோடு விலகி நின்றனர்.

*வெட்டிப் பேச்சு வேலையைக் கெடுக்கும். விடாமுயற்சி வெற்றியைக் கொடுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 98

– ஆசுகவி செ. சிவசுப்ரமணியம் அவர்கள் –

01 ஆயிரம் மரங்கள் நாட்டி அழகிய பூக்கள் வைத்து
வாயிலில் நுழைவோர் மகிழ வரவேற்புத் தருவதிலும்
புன்னகை ஒன்றே பூத்துப் புகுவோர் முன் நிற்றல்போதும்
ஆயிரம் பூக்களந்தப் புன்னகைக்குள் புதைந்தே தோன்றும்.

02 சோறொடு கறியுமாக்கி சொக்கிடும் பரிசும் சேர்த்து
விருந்தென்று வருவோர்கிட்டு வரவேற்புத் தருவதிலும்
மாறிடா அன்பாலவரை மகிழ்ந்திடச் செய்தால்போதும்
ஆயிரம் பரிசோடுணவும் அந்த அன்பிற்குள் புதைந்தே தோன்றும்.

03 கோயிலும் குளமுமோடிக் கும்பிட்டுக் கூத்துமாடி
வாயினால் புகழ்ந்துபாடி வணக்கம் நாம் தருவதிலும்
இறைவனார் படைப்பிலொன்றின் இடரினைக் களைந்தால் போதும்
ஆயிரம் வணக்கமந்த அருமைக்குள் புதைந்தே தோன்றும்.

04 வெள்ளையாய் வேட்டிகட்டி வெழுத்ததோர் சட்டைபோட்டு
அள்ளியே அணிகள் சாத்தி அழகைநாம் காட்டலிலும்
உள்ளத்தை மட்டுமென்றும் வெள்ளையாய் வைத்தால் போதும்
ஆயிரம் அழகுமந்த வெண்மைக்குள் புதைந்தே தோன்றும்.

05 பொன்னாடை தன்னைப்போர்த்தி பொற்கிளி தானும் தந்து
ஆயிரம் கரங்கள் தட்டி மரியாதை செய்வதிலும்
சொன்னதோர் சொல்லைக்கேட்டு சொன்னபடி நடந்தால்போதும்
ஆயிரம் மதிப்புமந்த அம்சத்துள் புதைந்தே தோன்றும்.

06 வதைத்துடலைச் சிதைத்துநீர் வாட்டியே வதைத்திட்டாலும்
வளர்த்த நாய் வாலாட்டி வரவேற்கும் தன்மைபோல
உதைத்தொருகால் உம்மைப்பிறர் உதறியே தள்ளினாலும்
பதைத்தவற்காய்ப் பரிந்திடலே பண்புமிகு மனிதமாகும்.

*ஏமாற்றுவது கெட்டிக்காரத்தனமல்ல. பெரும் நம்பிக்கைத் துரோகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 முகம்காட்டி முகம் மறைய ஏதுமின்றி இருக்கின்ற
ரசம்நிறைந்த கண்ணாடி தருகின்ற தத்துவம் போல்
பகைதோன்றி மறைந்த பின்னால் அகத்தினிலே ஏதுமின்றி
புதுமுகமாய்ப் பகைமுகத்தைப் பார்த்திடலே மனிதமாகும்.

08 கழுத்தோடு வெட்டுண்ட கதலிவாழை மரமொன்று
உடலினால் குலைபோட்டு தந்துகடன் முடிப்பதுபோல்
சொத்தோடு சுகமனைத்தும் அழிந்துதான் போனாலும்
மானிடத்தில் மகிமைதனைக் காத்திடலே மனிதமாகும்.

09 தன்னைத் தாங்குதலை இறைவனிடம் விட்டுவிட்டு
எம்மைத் தாங்கி நிற்கும் எழிலார்ந்த பூமியைப் போல்
எம்மைத் தாங்குதலை இறைவனிடம் விட்டுவிட்டு
நாம் பிறரைத் தாங்குவதே பெருமைமிகு மனிதமாகும்.

10 தரை முற்றும் தான் நடந்து தனக்கு இரை தான்தேடி
பிறர்க்கு அதை இரையாக்கித் தருகின்ற பசுவினைப்போல்
நமக்காக நாம் வாழ்ந்து நல்வாழ்வில் தேடுவதை
ஏற்றவற்கு ஏற்றபடி அளித்திடலே மனிதமாகும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செந்திவேல் மோகனதாஸ் | செந்திவேல் மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல — 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல — 021 226 3406 | பருத்தித்துறை. |

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல்களும் அறிவுடமை

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

கல்வியென்பது பாடத்திட்டத்திற்கமைவாகக் கற்று, பாடத்திட்டத்திற்கமைவாக கற்றதை ஒப்புவிப்பதாகும். ஆனால் கலைகள் என்பது படைப்பாற்றலை குறிப்பதாக அமைவதாலேயே பல்கலைக்கழகம் என்பது உயர் கல்விப்பீடமாக அமையப்பெறுகின்றது. எவ்வாறாயினும் அங்கும் துறைசார்ந்த பாடத்திட்டங்களும், கற்கை முறைகளும் இல்லாமல் இல்லை. இவ்வாறு இருந்தபோதும் கல்விக்கப்பாலும் ஆற்றல்கள் இருப்பதற்கு சான்றாதாரமாகத்தான் செ. மோகனதாஸ் சுவாமிகளுக்கு கலாநிதிப்பட்டம் கிடைத்தமையாகும். ஆனால் சிலர் கல்வியை பாடத்திட்டத்துக்கமைவாகவே அதுவும் பாடத்திட்டத்திற்கு உட்பட்டே உருவாக்க முடியும் என நம்புகின்றார்கள். இவ்வாறு கல்வி கற்றவர்களால் மட்டும்தான் அதுவும் அவர்கள் கற்ற கல்விக்கு உட்பட்டே சிந்தித்து கல்வியை (அறிவியலை) உருவாக்க முடியுமென்றால் கல்வியே உருவாகியிருக்காது. தவிர அறிவியல்கள் வளர்ச்சியடைந்தும், இருக்காது. இறைவனிடம் இருந்தே எமக்கு நேரடியாக கல்வி (அறிவியல்கள்) கிடைத்திருக்க வேண்டும். இவ்வாறு இறைவனிடமிருந்தே எமக்கு கல்வி (அறிவியல்கள்) நேரடியாகக் கிடைத்திருந்தால், மொழியும் இறைவனிடமிருந்தே, நேரடியாகக் கிடைத்திருக்கும். எனவே இறைவனிடமிருந்தே மொழியும் அறிவும் நேரடியாக கிடைத்திருந்தால் உலகம் முழுவதற்கும் ஒரே மொழியும் ஒரே அறிவியல்களுமே இருந்திருக்கும் மாறாக இறைவன் மனிதர்களை சுயதேடல்களால் மொழியறிவியல்களை தாமே உருவாக்கும் வண்ணம் பரிணாமத்தால் படைத்துள்ளார் உலகில் பல மொழிகளும் பல்வேறு அறிவியல்களும் உருவாகக் காரணங் களாகும். இதனால் மொழியிலக்கியங்கள் தரவரிசைக்கு உட்பட்டும் இருக்கின்றது. அதாவது எப்போதெல்லாம் மொழி பற்றிப்பேசப்படும் போதெல்லாம் மொழி சார்ந்த இலக்கியங்களும் பேசப்பட இவையே காரணங்களாகும். எவ்வாறாயினும் இறைவன் விதியே மொழியறிவியல்கள் உருவாகவும் காலத்துக்குக் காலம் வளர்ச்சியடையவும் காரணமாவது மட்டுமல்ல, தெய்வ சக்திகளாலும் மொழியறிவியல் பரிணாமங்கள் பாதுகாக்கப்பட்டமைக்கு ஆதாரமாக ஆலயங்கள் விளங்குகின்றது.

## மொழிகள்

உலகில் பல மொழிகள் இருக்கின்றன. அந்த மொழிகளின் கதையை அந்த மொழி சார்ந்த இலக்கியங்கள் மற்றும் சித்தாந்தங்கள் செல்வாக்குச் செலுத்துவது மட்டுமல்ல. பிரதேச வளக்காறுகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்த வகையில் மொழிகளில் பயன்படுத்தப்படும் சொற்கள்கூட, தனித்துவங்கள் மிக்கதாக விளங்குகின்றது. உதாரணம் ஒரு மொழியில் தெய்வம் என்ற சொல்லுக்குப் பொருள்படும்படியான சொல்லேயுண்டு.

*இதயம் ரோஜா மலராக இருந்தால் பேச்சில் அதன் நறுமணம் தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் மற்றும் கடவுள் என்ற சொற்களுக்கு நிகரான பொருள்படும் படியான சொற்கள் இல்லை. அதேபோல் இன்னுமொரு மொழியில் கடவுள் என்ற சொல்லுக்கு பொருள்படும்படியான சொல் மட்டுமே உண்டு. தெய்வம் மற்றும் இறைவன் என்ற சொல்லுக்கு நிகரான பொருள்படும் படியான சொற்கள் இல்லை.

மேலும் சில மொழிகளில் இறைவன் என்ற சொல்லுக்கு நிகராகப் பொருள் படியான சொல் மட்டுமே உண்டு. கடவுள் (பகவான்) தெய்வம் என்ற சொற்களுக்கு நிகரான சொற்கள் இல்லை. ஆக இறைவன் கடவுள் (பகவான்) தெய்வம் என்ற சொற்களுக்குப் பின்வருமாறு பொருள் கொள்ளுமிடத்து இறைவன் என்றால் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய மூன்று தொழிலுக்கும் காரணமானவர் என்று பொருள்படும். கடவுள் (பகவான்) என்றால் ஏதோ ஒரு தொழிலைச் செய்பவர் என்று பொருள். உதாரணம் படைத்தலைக் கடவுள் செய்தால் அழித்தலை எதிர்மறை சக்திகள் செய்வதாக தொழில்களை சமநிலைப் படுத்தப்பட வேண்டும். இவ்வாறெனில் காத்தலுக்கு காரணமாக மனிதர்களின் நல்லறமே திகழ்கின்றது. இதை அருளாளர்கள் நெறிப்படுத்தலாம். இவ்வாறு தெய்வம் என்றால் அவதாரங்கள் என்று பொருள். ஆனால் தெய்வங்கள் பல ரூபத்தில் இருக்கும். புனிதர்கள் என்றால் பூமியில் பிறந்த மனிதர்களில் அற்புதம் செய்யும் அருளாளர்கள் என்று பொருள்படும். இந்து மதத்தினர் மட்டுமே இயற்கையை இறைவனாகவும் பல்வேறு உருவங்களிலும் வடிவங்களிலும் வழிபடுகின்றார்கள். அதாவது ஆழ்ந்த தியானத்தில் இருப்பவனாக ஆடி அசைந்துகொண்டு இருப்பவனாக இவ்வாறு பல ரூபங்களில் வழிபடுகின்றார்கள். ஆனால் எல்லா மதத்திலுமே, ஒரு பிரிவினர்கள் புனிதர்களை வழிபடுகின்றார்கள். ஆனால் அந்த மதங்களில் உள்ள எல்லாப் பிரிவினருமே புனிதர்களை வழிபடுவதில்லை. பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் தெய்வங்களை வழிபடுகின்றார்கள். ஆனால் அவர்கள் தெய்வங்களை கடவுளாகவோ இறைவனாகவோ கருதுவதில்லை. காரணம் அவர்களுடைய சித்தாந்தங்கள் தெளிவான அறிவை அவர்களுக்குத் தருகின்றது.

**மதங்கள்**

அறிவுக்கு அப்பாற்பட்ட அதாவது அறிவால் அறியமுடியாதவற்றையே பயத்தினால் வழிபட்டுவந்த மக்களுக்கு அறிவை கொடுப்பதற்காக உருவானதுதான் மதங்கள். ஆனால் அதீத கற்பனையில் அறிவையும் அற்புதங்களாக காட்டவும் சுவாரசியமாக அறிவை அறிவதில் ஆர்வத்தை ஏற்படுத்தவும் கற்பனைக் கதைகள் வாயிலாக மதங்கள் அறிவை அறியவைக்க முயன்றாலும், மனிதர்களின் அறிவுப்பக்குவத்திற்கு ஏற்பவும், சொல்ல வேண்டியும் இருந்தது. இதனால் மனித அறிவு பரிணாமம் ஏற்பட்ட போது புதிய மதங்கள் உருவாகி அதிக அறிவியல் களை முன்வைத்தது. இந்த வகையில் கடவுள் என்பது அறிவையும் அறிமுகப்படுத்துகின்ற அதேநேரம் ஆன்மீகத்தையே முதன்மைப்படுத்துகின்றது. ஆனால் ஆன்ம சக்திகளை மனிதர்கள் தவறான வழியில் பயன்படுத்தக்கூடாது என்பதால் கற்பனையில் மறைபொருளாக்கி நிறுவனமயப்படுத்துகின்றது. இவ்வாறு பிற்காலத்தில் அறிவை (இறைவனை) முதன்மைப்

*நண்பனின் மறைவைத் தாங்கிக்கொள்ளலாம். நட்பின் மறைவைத் தாங்கிக்கொள்ள முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துகின்றபோது ஆன்மீகத்தை அவை நிராகரிக்க முயல்கின்றது. ஆனால் தவிர்க்கமுடியாது அறிவியல்களுடன் ஆன்மீக நம்பிக்கைகளும் சேர்ந்து கொள்கின்றது. எவ்வாறாயினும் இந்து மதத்தைத் தவிர வேறெந்த மதமும், மதப்பிரிவுகளும் (சமயங்கள்) இறைவனுக்கு (கடவுள்) உருவமமைத்து வழிபடுவதேயில்லை.

## அறிவுடைமை

கல்வி என்பது முன்னோர்களது அறிவியல் ஆவணம். ஆகவே கல்வி மற்றும் அறிவியல்கள் பலரது சிந்தனைகளின் தொகுப்பு. எனவே கல்வி மற்றும் அறிவியல்கள் எல்லோருக்கும் பொதுவானது. யாரும் அறிவை அறியலாம். அறிந்த அறிவை பேசலாம். எழுதலாம் (அறிவிக்கலாம்) ஆனால் ஆற்றல் தனித்துவமானது. எல்லோருக்குள்ளும் ஒரே விதமான ஆற்றல் உருவாவதில்லை. மேலும் அறிவை எல்லோரும் அறியக்கூடியதாக இருப்பதால், அறிவியல் திருட்டுக்கள்கூட இடம்பெறலாம். ஆனால் அறிவில்லாதவர்களாலும் அடிமட்டத்தில் இருப்பவர்களாலும் அறிவை திருடமுடியாது. அறிவியல் திருட்டுக்கள் என்பது பெரிய இடத்துச் சமாச்சாரம். தவிச்ச முயலடிப்பது இவர்களது கலை. இவ்வாறு அறிவியல் களை திருட முடிந்தாலும் ஆற்றலைத் திருடமுடியாது. மேலும் ஆற்றலை அடிமைப்படுத்தவும் முடியாது. ஒரு காலத்தில் குருகுலக் கல்வி முறையில் ஒரே குருவிடமே கல்வி கலைகள் அனைத்தையுமே கற்று புலவர்களாகவும் பல்வேறு கலைகளிலே விற்பன்னர்களாகவும் விளங்குபவர்களைப் பார்த்து அவர்களது குரு இவர்களது ஆற்றல் அறிவுகளுக்கு நானே காரணம் எனவே இவர்களது அறிவுடைமைகள் எனது பெயருக்கே மாற்றித் தரவேண்டும் என்று கேட்பது கிடையாது. ஆனால் அறிவியல் திருட்டுகள் இடம்பெற்றிருந்தால் ஒரு ஆற்றல் உள்ள திறனாய்வாளனால் கண்டுகொள்ள முடியும். மேலும் அரசர்கள் காலத்தில் யுத்தத்திலே ஒரு அரசர் இன்னுமொரு அரசரை அடிமையாகப் பிடிக்கும் மரபுகள் இருந்தது. இவ்வாறு பொருளாதார அடிமைகளும் இருந்தார்கள். ஆனால் அறிவியல் அடிமைகள் இருக்கவில்லை என்பதற்கு ஆதாரமாக சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றிலே பதிவாகியுள்ளது. அதாவது சிவபெருமான் அந்தணர் வேடத்தில் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட்கொள்ள வந்தபோது சுந்தரமூர்த்தி நாயனார் அந்தணர் வேடத்தில் வந்த சிவபெருமானைப் பார்த்து அந்தணர்களுக்கு அந்தணர்கள் அடிமையில்லை என்ற அறச்செய்தி எமக்கு கிடைக்கின்றது. அதாவது வீரத்துக்குக் குறியீடாக இருக்கும் சத்திரீகர்களும் செல்வத்துக்குக் குறியீடாக இருக்கும் வைசீகர்களும் ஒருவருக்கொருவர் அடிமையாக முடியும். ஆனால் கல்விக்கு குறியீடாக இருக்கும் பிராமணர்கள் ஒருவருக்கொருவர் அடிமையாக முடியாது என்பதே இதன் பொருளாகும். எனவே ஒரு அடிமை தனது உடல் உழைப்பால் ஈட்டுகின்ற பொருள் செல்வங்கள் அனைத்தும் அவன் எஜமானுக்கே உடமையாகிவிடும். ஆனால் அந்த அடிமை புலவனாக இருந்து படைக்கும் இலக்கியங்கள் எஜமானுக்கு அறிவுடமையாவதில்லை. காரணம் அறிவை அறிய வைத்தே ஒருவன் அறிவாளியாக முடியும். அடிமுட்டாளாக்கி அறிவாளியாக முடியாது.

*ஆயிரம் முறை சிந்தியுங்கள். ஆனால் ஒரேயொருமுறை முடிவு எடுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும் படைப்பாளிகள் அரசர்களின் அல்லது வல்லரசுகளின் அடக்கு முறைகளுக்கு ஆளாகியிருக்கின்றார்கள் என்பது அவர்களது படைப்புக்களிலிருந்து திறனாய்வு செய்யக்கூடியதாகவுள்ளது. உதாரணம் ஆன்மா மற்றும் பரமாத்மா சடப்பொருள்களால் ஆனவையல்ல. எனவே, அவைகளை எமது கண்களால் காணமுடியாவிட்டாலும் சித்தர்கள் தமது ஞானக்கண்ணால் கண்டு அவைகளுக்கு தமது பாடல்கள்மூலம் உருவமமைத்துக் காட்டியிருக்கின்றார்கள். ஆனால் பிற மதங்கள் உலகைப் படைத்த இறைவனுக்கு (கடவுளுக்கு) கண்களால் காணக்கூடியதாக உருவம் உண்டு. ஆனால் மறுமையில் மட்டுமே இறைவனை (கடவுளைக்) காணமுடியும் என்று சொல்வதால் அந்த மதங்களின் எந்தச் சமயப் பிரிவுமே இறைவனுக்கு (கடவுளுக்கு) உருவமமைத்து வழிபாடு செய்வதேயில்லை. தவிர இறைவனின் (கடவுளின்) பேரொளியைக் கண்களால் காணமுடியாது என்பதற்கு ஒரு மதத்திடம் சித்தாந்தக் கதையும்கூட இருக்கின்றது. அந்த சித்தாந்தக் கதையையே முன் கதையைப் பின்னுக்கு மாற்றி பின் கதையை முன்னுக்கு மாற்றி ஆனால் கருவூலம் மாறாது. அருணகிரிநாதர் வாழ்க்கை வரலாற்றில் உள்வாங்கப்பட்டு இருக்கின்றது. முருகனைக் கண்களால் காணமுடியாவிட்டால் உலகெங்கிலுமே முருகனைக் கதிர்காமத்தில் வழிபாடு செய்வதுபோல்தான் வழிபாடு செய்யவேண்டும். எனவே இவை வரலாற்றுக்கான சான்றாதார மாக பதிவாகியிருக்கின்றது. எனவே அறிவு என்பது எல்லோராலும் அறியக்கூடியதாகவும் அறிந்த அறிவை பேசக்கூடிய்தாகவும் எழுதக்கூடியதாகவும் இருந்தாலும் படைப்பாளியின் ஆற்றலுக்கே அறிவு சொந்தம். மேலும் படைப்பாளிகளின் ஆற்றல்களை அடிமைப்படுத்த முடியாவிட்டாலும் பல்வேறு அடக்கு முறைகளுக்கு உள்ளாகியிருக்கின்றது.

## மாகாண மனிதவுரிமைகள்

*முன்னால் நின்று தலைமை தாங்கி*
*சந்நிதியான் ஆச்சிரமத்தை உருவாக்கி*
*பின்னால் நின்று தட்டிக் கொடுத்து*
*பல கவிஞர்களை கலைஞர்களை உருவாக்கி*
*மண்ணில் நல்ல வண்ணம் வாழ மனிதர்*
*களுக்கு மனித உரிமைகளை உருவாக்கி*
*என்னாலும் பேச முடியும் எழுத முடியும்*
*என்ற பேச்சு சுதந்திரத்தை எனக்கும் தந்து*
*இன்னாரின்ன பணிகளை ஓய்வில்லாமல் செய்து*
*மாகாண மனிதவுரிமை பணிப்பாளருமாகி*
*விண்முட்டும் சாதனைகள் செய்த சாதனைத்*
*தமிழன் கலாநிதி செ. மோகனதாஸ் அவர்கள்*
*என்றென்றும் தேவையுடையோர் வாழ்வில்*
*உரிமைகள் கிடைக்க உழைக்க வாழ்த்துக்கள்.*

***-இராம ஜெயபாலன்-***

*நாம் நம்மை அடைய மற்றவர்களை எதிர்பார்க்கும்வரை நாம் அடிமைகளே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருவடிப் பெருமை

– திரு செ. பாலச்சந்திரன் அவர்கள் –

மூன்றாம் திருமுறையில் திருவாவடுதுறைத் திருப்பதிகம் மூலம் ஞானக்குழந்தை திருவடிப் பெருமைபற்றி திருப்பெரு சிவஞானத்தால் உணர்த்துவதைப் பார்த்தோம். தொடர்ந்து அப்பதிகத்தில் நான்காம் திருப்பாடலில் "...அம்மலர் அடியலால் அரற்றாதென் நா" எனக் குறிப்பிட்டுள்ளதை நோக்கவேண்டும். அத் திருப்பாடல் வருமாறு

திருச்சிற்றம்பலம்

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாதென் நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரிஎழ முனிந்தவனே.
இதுவோ எமை ஆளுமாறீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

திருச்சிற்றம்பலம்

இப்பதிகத்தில் தொடர்ந்து வரும் 5,6,7,8,9,10ஆம் பாடல்களில் இரண்டாம் வரியில் திருவடியைத் தொழும் விதத்தை நோக்கலாம். ஐந்தாம் பாடலை நோக்குவோம்.

திருச்சிற்றம்பலம்

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்தேன்
கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோ எமை ஆளுமாறீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

திருச்சிற்றம்பலம்

இப்பாடலில் "செய்கழல் அடி" எனப் போற்றுகின்றார். "செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்" என்று உணர்வரிய மெய்யானியாகி விளக்குகின்றார்.

இப் பதிகத்தைத் தொடர்ந்து வரும் ஆறாம் திருப்பாடலில்

"எந்தாய் உன்னடியலால் ஏத்தாதென் நா" எனவும்,

அதேபோல ஏழாம் பாடலில்,

"அப்பாவுன் அடியலால் அரற்றாதென் நா" எனவும்

எட்டாம் திருப்பாடலில்,

"பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழல்அலால் சிந்தை செய்யேன்" எனவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாம் திருப்பாடலில்,

"உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மல ரடியலால் உரையா தென் நா" எனவும்,

பத்தாவது திருப்பாடலில்,

"பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலால் அரற்றாதென் நா" எனவும் திருவடியைப் பாடல்கள் தோறும் வியந்து விளம்புவதையும் நாமும் அம்மலர் அடியைப் போற்றி வணங்கிப் பேரின்பம் அடைவோம்.

தொடர்ந்து 3ஆம் திருமுறையில் பஞ்சாக்கரத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

கார்வணன் நான்முகன் காணதற் கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வணம் ஆவன அஞ்செழுத்துமே.

திருச்சிற்றம்பலம்

"சீர்வணச் சேவடி" என்று தவமுதல்வர் திருவடியின் பெருமையைப் பாடியுள்ளார் இப்பாடலில்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பல தலங்களுக்கும் யாத்திரை செய்து பல திருப்பதிகங்களைப் பாடியருளியுள்ளார். இவ்வாறு யாத்திரை செய்யும்போது "திருக்கானப்பேர்" என்ற தலத்தை அடைந்தவர் எம்பெருமானைப் போற்றிப் பாடும்பொழுது எம்பெருமானின் அடியவர்கள் சரண் அடைவதற்கு "கடி யுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணலின் அடியலால் அடை சரண் உடையரோ வடியரே" என அத்திருவடியே எமக்கு அரண் என்று உரைப்பது தெளிவாகிறது. பாடல் வருமாறு.

திருச்சிற்றம்பலம்

தலம்: திருக்கானப்பேர் பண்: கொல்லி

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணலின்
அடியலால் அடைசரண் உடையவரோ வடியரே.

திருச்சிற்றம்பலம்

திருத்தல யாத்திரையின்போது திருக்காளத்தித் தலத்தையும் சூழலையும் பார்த்து மகிழ்ந்த தமிழாகரன் தனக்கே உரிய முறையில் "காளத்தி எந்தையாரிணையடி யென் மனத்துள்ளவே" என்று பாடி மகிழ்வதை அவரது திருப்பாடல் வாயிலாக நோக்கலாம். திருமுகலியாறு பாய்ந்து அழகு செய்யும் காளத்தி மலையிலே அவ்வாற்றங்கரையில் சந்தனமரம், அகில் மரம், தேக்கமரம் ஆகியவற்றின் பொழிலில் இருந்து மந்தமாருதம் வீச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளத்தியப்பர் ஆகிய எனது தந்தையாரின் இணையடிகள் என்றும் என் மனத்தில் நீங்காது நிலைபெற்றுள்ளது என்று பாடி மகிழ்கின்றார். அத் திருப்பாடலை நோக்குவோம்.

திருச்சிற்றம்பலம்

சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையா ரிணையடி யென்மத் துள்ளவே.

திருச்சிற்றம்பலம்

தொடர்ந்து திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்த நமச்சிவாயப் பதிகத்தை நோக்கு வோமாயின் அப்பதிகத்தில் உள்ள ஒன்பதாவது திருப்பாடலில் "அண்ணல் தன் பாதந்தான் முடி நேடிய பண்பராய்..." என்று குறிப்பிடுகின்றார். முழுத் திருப்பாடலை நோக்கினால்...

திருச்சிற்றம்பலம்

போதன் போதன கண்ணனு மண்ணல் தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரிதாகி யலந்தவர்
ஓது நாமம் நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

அடி முடி தேடிய புராணக்கதையைக் கூறும் இத் தேவாரம் திருமால் எம்பெருமான் திருவடியைத் தேடியும் காணகில்லார். ஆனால் பரிந்து நன்மனத்தால் வழிபட்ட மார்க்கண் டேயருக்கும், சண்டேஸ்வரர் என்போருக்குத் தம் திருவடிப்பேறை வழங்கியும், மாணிக்கவாசக சுவாமிகளுக்கு நேரடியாகக் குருமூர்த்தமாக எழுந்தருளித் திருவடி தீட்சை வழங்கியமையும் நோக்கற்பாலது. "அன்பே சிவம்" இதுவே இதன் பொருள். (தொடரும்...

## முருகனை வணங்குவோர்க்கு சேரும் நன்மைகள்

பகையாக முருகனடியார்க்கு இங்கு எவரும் இல்லை
முருகன் பதிதொழும் அடியார்க்கு ஏது தொல்லை
வகை தொகையாய் கூடும் பக்தர்க்கு ஏது எல்லை
வடிவழகா உனைத் துதித்தாலே சேரும்பல நன்மை
விரித் தெமக்கு தமிழ் கூறுதே முருக புகழின் தன்மை
விழுந்து அழுது தொழுவோர்க்கு தீரும் தீமை
தெரிந்து பக்தி கொண்டவர்க்கு வாழ்வில்
தீமை தூர விலகியே ஓடுமே இதுவே உண்மை.

*-சின்னப்பு தனபாலசிங்கம்-*

*அழகோடு அகங்காரமும் கூடி நின்றால் அந்த அகங்காரமே அழகை அழித்துவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தொழிலில் மறைத்தல் என்பது

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

இறைவன் ஐந்தொழில் புரிபவன். அதற்காகவே உரியவர்களை நியமித்தும் செயலாற்றி வருகின்றான். பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆகிய ஐவரையும் நியமித்து, முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களை இயற்றியும் வருகின்றான். இறைவன் உயிருக்குள் உயிராக மறைந்து நின்று, உயிர்களைப் பிறப்பு இறப்புக்களில் மீள மீளச் செலுத்தி, உலக நுகர்ச்சியில் அழுந்தியும், உயிர்களை இளைப்பாற்றியும் வருவதே மறைத்தல் என்பது. ஆதலின் இம் மறைத்தல் தொழிலில் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களும் அடங்கும். ஆகையால் இறைவனின் ஐந்தொழில்களுக்குள் மறைத்தல், அருளல் என்னும் இரண்டு தொழில்களும் அடங்கி நிற்கும். மறைத்தல் என்பது பந்தம் என்றும், அருளல் என்பது வீடு என்றும் கூறப்படும். வீடு என்பது வீடுபேறாகிய முத்தி நிலையாகும். "பந்தமுமாய் வீடும் ஆயினாருக்கு" என வரும் திருவாசக அடியில் (திருப் பொற்சுண்ணம் 20) ஐந்தொழில்களும் இவ்விதம் இரண்டு தொழில்களாகச் சொல்லப்பட்டமை காணலாம்.

இறைவனின் செயல்களைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையே பொதுவாகக் கூறுவது பல சமயத்தவர்களின் கருத்தாகும். அதனால், ஐந்தொழிலை முத்தொழிலில் அடக்கிக் கூறலாம். அவ்வாறு கூறும்போது மறைத்தல் தொழில் காத்தல் தொழிலிற்குள் அடங்கிவிடும். அதுபோல் அருளல் தொழில் அழித்தல் தொழிலிற்குள் அடங்கிவிடும். பின்வரும் உண்மை விளக்கம் (மெய்கண்ட சாத்திர நூல்) தரும் பாடலை நோக்குவோம்.

படைப்பன் அயன் அளிப்பன் பங்கயக்கண் மாயன்
துடைப்பன் உருத்திரனும் சொல்லில் - திடப்பெறவே
என்றும் திரோபவிப்பர் ஈசர்; சதாசிவரும்
அன்றே அநுக்கிரகர் ஆம்.

-பாடல் 08.

மேலுள்ள பாடலில் அதி தெய்வங்களின் தொழில்கள் வகுத்துக் கூறப்பட்டுள்ளன. தொகுத்துக் கூறுதல் வேறு. வகுத்துக் கூறுதல் வேறாம். இப்பாடலின் கருத்தாவது; பிரமதேவன் படைத்தல் தொழிலைச் செய்வான். தாமரை போன்ற கண்களையுடைய மாயோனியாகிய திருமால் (விஷ்ணு) காத்தல் தொழிலைச் செய்வான். உருத்திரன் அழித்தலைச் செய்வான். மகேசுரர் எப்பொழுதும் மறைத்தல் தொழிலைச் செய்வார். மறைத்தல் தொழிலின் பயனாகப் பக்குவம் எய்திய உயிர்களுக்கு அப்பொழுதே சதாசிவரும் அருளும் தொழிலைச் செய்வார்.

*விதியைத் தாங்குவதுதான் அதை வெற்றிகொள்ளும் வழி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் பக்குவம் பெறுவதன் பொருட்டு என்றும் மறைத்தல் ஆகிய தொழிலைச் செய்பவர் மகேசுரர் ஆவார். அதன் பயனாக பக்குவம் எய்திய உயிர்களுக்கு அப்பொழுதே அருள் புரியும் தொழிலைச் செய்பவர் சதாசிவர். மறைத்தல் என்பது திரோபவம் எனப்படும்.

மறைத்தல் தொழில் என்பது மாயை. கன்மங்களைச் செயற்படுத்தி உயிர்களைப் பிறப்பு இறப்புக்களில் பட்டு உழலச் செய்தலாகும். இதனால் மெய்யுணர்வு ஆகிய பேரறிவு தோன்றாமல் மயக்க அறிவாகிய (அறிவுணர்வு) சிற்றறிவே தோன்றும். அச் சிற்றறிவு உயிர்களை உலகப் பொருள்களோடு பிணித்து அப்பொருள்கள்மீது பற்று, ஆசை கொள்ள வைக்கும். அதனால், உயிர்கள் அவற்றில் நாட்டம் கொள்ளும். அதனால் உயிர்கள் இறைவனை நோக்கி விடாமல் தடையும் ஏற்படும். உயிர்களுக்கு உலக நோக்கு உண்டாகும். அதனால் உயிர்கள் பல துன்பங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

இவ்வாறு உயிர்கள் தம்மையும் அறியாது, தமது தலைவனாகிய இறைவனையும் அறியாமல் மயங்கி நிற்கும் நிலையேற்படுகிறது. அவ்வகையில் இறைவனது இச் செயல் "மறைத்தல்" எனப்படுகின்றது. இவ்வாறு மறைத்தலை இறைவனே செய்கின்றான். அவனும் ஓர் காரணத்தோடுதான் மறைத்தலைச் செய்கின்றான். இறைவன் எல்லாம் அறிபவர். உயிர்களை அநாதியே பீடித்துள்ள ஆணவமாகிய நோய்க்கு மருந்தாகவே உயிர்களுக்கு மாயை கன்மங்களைச் சேர்த்து விடுகின்றான் இறைவன். எனவே மாயை கன்மங்களைச் சேர்ந்த உயிர்கள், உலக வாழ்வில் பல இன்னல்களை அடைகின்றன. இவ்வாறு இன்னலடையும் உயிர்களுக்கு அதனால் நன்மையும் உண்டு. அந் நன்மையாவது உயிர்களைப் பீடித்துள்ள ஆணவமலம் தேய்வடைந்து குறைந்துபோதல் என்பதாகும். ஆணவம் மெலிதல் ஆகும். எனவே இறைவன் மறைத்தலைச் செய்வதும், உயிர்களின் அறிவை வளர்த்து உயிர்களை உய்வடையச் செய்தலேயாகும் என்பதை உணர்தல் வேண்டும். ஆகவே மறைப்பும் நன்மை கருதி இறைவனால் மேற்கொள்ளப்படுகிறது.

ஐந்தொழிலை முத்தொழில் ஆகவும் காண்பர். அவை படைத்தல், காத்தல், அழித்தல் என்பன. இம் முத் தொழில்களுள் ஐந்தொழிலும் அடங்கும். மறைத்தல் என்பது காத்தல் தொழிலும் அருளல் என்பது அழித்தல் தொழிலிலும் அடங்கும் என்பதை உணர்க.

உண்மை விளக்கம் என்னும் மெய்கண்ட சாத்திரநூல் கூறும் பாடல் ஒன்று இறைவனின் மறைத்தல் தொழில் பற்றிச் சிறப்பாகக் கூறியுள்ளது. அப்பாடலில் "திடப் பெறவே" என ஓர் சிறப்பு அடைமொழியும் கூறப்பட்டுள்ளது. ஐந்தொழில்களின் மறைத்தல் தொழிலைப் பற்றிப் புரிந்துகொள்வது சற்றுக் கடினமானதே. அதன் நோக்கத்தைப் புரிதலும் இலகுவல்ல. அதனாலேயே ஆசிரியர் மறைத்தல் தொழிலிற்கு அடைமொழி தந்து பாடியுள்ளார். அது மெச்சத்தக்கது. "திடப்பெறவே" என்பது "உறுதியடையும்படி" என்பது கருத்தாகும். உயிர்கள் உறுதியடையும்படி இறைவன் மறைத்தலைச் செய்கின்றான் என்பது கருத்தாகும் இனி, உறுதியடைதல் எதற்கு அது என்ன என்பதை நோக்குவோம்.

ஆணவ மலத்தின் தூண்டுதலால் உயிர் நான், யான் என்னும் செருக்கடைகிறது. தானே எல்லாவற்றிற்கும் பெரியவன் எனவும், தானே எதற்கும் தலைவன் எனவும் செருக்குற்று நிற்கும் உயிர். இந்த உயிரின் ஆணவச் செருக்கை குறைக்கும் நோக்கோடுதான் இறைவன்

*உலகில் நிரந்தரமானவை எதுவும் இல்லை. துன்பம் மட்டும் என்ன விதி விலக்கா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்தல் தொழிலைச் செய்கின்றான். அதன்படி உயிர்கள் பிறப்பு இறப்புக்களில் உழன்று மாறி மாறிப் பல துன்பங்களை அனுபவிக்கும். அதனால் உயிரின் ஆணவச் செருக்கு அடங்கும். இதைவிட வேறு வழிகளால் உயிரின் ஆணவச் செருக்கை அடக்கமுடியாது என்பது இறைவனுக்குத் தெரியும். உயிரின் இந்த ஆணவ முனைப்பினையே "பசுஞானம்" என்று குறிப்பிட்டுள்ளனர். ஆணவத்தின் சக்தி குறைந்தால் அறியாமை தேயும். நல்லுணர்வும் தோன்றும். தன் செயல் இன்றி எல்லாம் இறைவன் செயல் என்னும் உணர்வு தோன்றவும் இடமளிக்கும். இது வளர தன்னையே பெரிதாக மதித்திருந்த உயிர் இதன் பிறகு இறைவனே தனது வாழ்முதற் பொருள் என்னும் உண்மையை உயிர் உணரும். உயிர் இறைவனிடம் மண்டியிட்டு, முறையிட்டு இறைவனையே தஞ்சமென அடையும். உலகத்தை நோக்காது இறைவனை நோக்குவதே உயிரின் பக்குவ நிலையாகும். இந்த உறுதிநிலையை உயிர்கள் பெறும்பொருட்டே இறைவன் மறைத்தல் தொழில் செய்கிறான்.

## திருநீறு

ஏழை நெசவாளி ஒருவன் ஊருக்கு வந்த சாமியாரிடம் "சுலபமான உபதேசம் செய்யுங்கள்" என்று கேட்டான். சாமியார் புன்னகை புரிந்தார். "அப்பா! திருநீறு பூசிய திருமுகத்தைப் பார்த்த பிறகுதான் ஆகாரம் சாப்பிடுவது என்ற ஒரு கொள்கையை வைத்துக்கொள்" என்று அருளினார். "அப்படியே என்றான்" ஏழை.

அவனுடைய பக்கத்துவீடு ஒரு குயவனாருடையது. அந்தக் குயவனார், பரம சிவபக்தர். நெற்றியில் எப்போதும் வெண்ணீறு தரித்துக்கொண்டிருப்பார். அடிக்கடி அவனுடைய வீட்டுப்பக்கம் வருவார். திருநீறு பூசிய அவருடைய முகத்தைப் பார்த்த பின்னரே, கூழானாலும் குடிப்பதை வழக்கமாக்கிக்கொண்டான் ஏழை.

ஒருநாள், குயவனார் அவன் வீட்டுப்பக்கம் வரவில்லை. கடும் பசியால் துடித்தான் ஏழை. "போய் அவர் வீட்டில்தான் பார்த்துவிட்டு வாருங்களேன்" என்றாள் அவன் மனைவி. சரி என்று அடுத்த வீட்டுக்கு ஓடினான். அந்தவேளை குயவனார் களிமண் எடுக்கும் பொருட்டு ஏரிக்குச் சென்றிருந்தார். ஒரே ஓட்டமாக ஏரிக்கரைக்கே ஓடினான் அங்கே ஒரு பெரிய பள்ளம். அதில் குயவனார் மண் வெட்டி எடுக்கும்போது இரண்டு தங்கக் குடங்கள் இருந்தன. யாராவது பார்த்துவிட்டால் துன்பமாயிற்றே என்று மேலே நிமிர்ந்து பார்த்தார். அந்த நேரத்தில் ஏழை, "பார்த்துவிட்டேன்" என்று கூறிவிட்டுப் பிடித்தான் ஓட்டம். அவன் பார்த்தது, அவரது விபூதியணிந்த முகத்தைத்தான். குயவனார் பதைத்துப் போனார். "இவன் யாரிடமாவது சொல்லிவிட்டால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போமே!" என்று அஞ்சினார்.

பதட்டத்தோடு அவனை அழைத்த குயவர், "நீயும் ஏழை, நானும் ஏழை. ஆளுக்கு ஒரு குடம் எடுத்துக்கொள்வோம். இதை வெளிப்படுத்த வேண்டாம். இந்தா, ஒரு குடம். நீ கொண்டுபோ" என்று கொடுத்துவிட்டார்.

திருநீறு பூசிய முகத்தைப் பார்த்த ஒரு நன்மையின் காரணமாகவே இந்த நலம் எய்தியதே. நாமே திருநீறு பூசி வழிபாடு செய்தால் இகபர நலன்கள் எய்துமே" என நினைத்த நெசவாளி அன்று முதல் முறையே ஆசார அநுஷ்டானங்களை மேற்கொண்டு திருநீறு பூசித் தெய்வ மணம் கமழச் சிறந்து விளங்கினான்.

*சபலம் பிறக்கும்போது எவனுக்கு வைராக்கியம் பிறக்கின்றதோ அவனே ஞானியாவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைக் கூத்தனின் ஆடல் காண வாரீர் (தொடர்ச்சி...)

— *திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்* அவர்கள் —

## கருவூரார் செய்த நடராஜர்

சைவர்களுக்கு கோயில் என்றாலே அது சிதம்பரம் தில்லை என்பது இந்த ஊரின் பெயர். இங்கே பொன்னம்பலத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமான் ஆனந்த நடனம் ஆடிக்கொண்டிருக் கிறார். பதஞ்சலி, வ்யாக்ரபாதர், பிருங்கி மூவரும் கண்டு களித்து வியந்து போற்றிப் பாடு கின்றனர்.

அந்தப் பொன்னம்பலத்தை இரணியவர்மன் என்னும் மன்னனும் தரிசிக்கின்றான். அவன் மனம் என்றும் காணாத அமைதியை அடைகிறது. அவனுள் பல எண்ண அலைகளும் எழும்புகின்றன. சிதம்பரத்து ஆலயக் கூரை பொன்னால் வேயப்பட்டு பொன்னம்பலமாகத் திகழ்ந்திட, ஏன் திருமேனி மட்டும் முழுவதும் பொன்னில் இல்லை. சுத்தமான செம்பொன்னில் ஒரு நடராஜ ரூபத்தை நாம் ஏன் உருவாக்கக்கூடாது.

திருப்பூவனம் பொன்னையாளுக்கு உத்ஸசவமூர்த்தியைச் செய்யும் ஆசை வந்தது. இரணியவர்மனுக்கோ நடராஜ ரூபத்தையே செய்யும் ஆசை வந்தது.

நாடு திரும்புகிறான். பிரதானியர்களை அழைக்கிறான். விருப்பத்தைக் கூறுகிறான். செம்பொன்னையும் குவிக்கிறான். ஆனால் பொற் தச்சராலும் சுத்தமான பொன்னில் செம்பு கலக்காமல் ஸ்ரீ நடராஜர் தோற்றத்தை வார்க்கமுடியவில்லை. இரணியவர்மன் துளியும் செம்பு கலக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறான். தச்சர்கள் இது ஆகாது என்கின்றனர். இரணியவர்மன் வருந்துகிறான். அவனது வருத்தம் போகர் சித்தர் காதுவரை போகிறது.

புன்னகைக்கிறார் போகர். தன் சீடனாகிய கருவூரரை இரணியவர்மனிடம் அனுப்புகிறார். இனி வரும் நாளில் ஒரு கருவிலும் ஊர்ந்திடாமல் பிறவா வரம் பெற வேண்டும் என்று வாழ்ந்தபடியால் கருவூரர் என்ற காரணப்பெயர் கொண்டவர். அன்னையின் கருவிலேயே இருந்தபோது வேதிய தந்தையின் சாஸ்திர ஞானத்தை, ஆலய ஆகம விதிகளை அவர் சொல்லக்கேட்டு கருவிலேயே ஊறி வளர்ந்தவர் என்பது பொருள்.

அப்படிப்பட்டவர் ஸ்ரீ நடராஜர் ரூபத்தை வடிவமைக்கிறார். கூடுதலான பொன்னோடும், கொஞ்சம் செப்போடும் அந்தச் செப்புத்தான் அவர் செய்த தப்பு. மன்னன் அதை அறிந்து பெரும் கோபம் கொள்கிறான். நூறு சதவீதம் பொன்னில் நான் உருக்கான விரும்பினால், செப்பைக் கலந்துவிட்டாரே! செப்பு கூடாது என்பதே என் விருப்பம். என் கட்டளையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீறிவிட்டார். எனவே இது ராஜ குற்றம். அவரைத் தூக்கிச் சிறையிலே பூட்டினான். கருவூரார் தயார் செய்ய நடராஜர் பொன் விக்கிரகத்தினுள் நூற்றுக்கு நூறு பொன் இல்லை. சிறிது செப்பைச் சேர்த்தால்தான் நடராஜர் திருமேனி உருக்கொள்ள முடியும். இதனை மன்னன் ஏற்கவில்லை. அவனால் சிலை செய்ய பணிக்கப்பட்டவர்களும் இதனை ஏற்கவில்லை. இந்த சோழ தேசத்தில் இல்லாத பொற்கொல்லர்களா? என்று ஏளனமாப் பேசினர்.

ஆனால் கருவூரார் செய்த நடராஜர் மூர்த்தத்தில் நுட்பங்கள் அதிகம் இருந்தன. காலிலும் கையிலும்தான் செப்புக் கலப்பிருந்தது. திருமுகம் நூற்றுக்கு நூறு பொன்னில் கொஞ்சியது.

மன்னா! எந்த ஒரு சிவரூபத்தைக் காணும்போதும் அதன் முகத்தைப் பார்த்தே வியப்போம். முகத்தின் அமைப்பைப் பொறுத்தே மற்றப் பாகங்களை ரசிப்பதும், அதைக் கணிப்பதும் நிகழும். இங்கே பொன் முகத்தோடு காட்சியளிக்கிறான் ஈசன். எனவே இதை ஒரு பூரண பொற் சிலையாக தாங்கள் கருதலாம் எனக் கருவூரார் சொன்னதை மன்னன் ஏற்கவில்லை.

மற்ற சிற்பிகள் பொறாமையினால், மன்னா! எங்களுக்கென்னவோ இந்தத் திருமேனியில் பாதிக்குமேல் செப்பு கலந்திருக்குமோ என ஐயமாக உள்ளது என்று கூறவும் மன்னரின் மனம் பற்றி எரியத்தொடங்கியது. இவர் இந்தத் திருவுருவை செய்யும்போது எங்களைக் காணவிடவில்லை. இரகசியமாகவே செய்தார் என பொன்னைக் களவாடி ஒளித்து வைத்திருக் கலாம் என மன்னனுக்கு கோபமூட்டினர். "எங்கே நான் கொடுத்த பொன்?" எனக் கோபத்துடன் கருவூராரைக் கேட்டான் மன்னன்.

கருவூரார் அதிர்ச்சி அடைந்தாலும், இது ஒரு சோதனை. இதனைத் துணிவோடும், நேர்மையோடும் எதிர்கொள்ள வேண்டும் என எண்ணி தன்னை இச் செயலுக்காகப் பணித்த போகரை மனதில் நினைத்தார். கருவூரார் போகரை எண்ணித் தியானத்தில் இருக்க, மன்னனும் கருவூராரைத் தூக்கிச்சென்று சிறையில் அடைக்கும்படி உத்தரவிட்டான். அரசன் என்னும் அதிகார மமதை ஒரு சித்தபுருஷனிடம் தான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் எனத் தெரியவில்லை.

அடுத்த சில நாழிகைக்குள் போகர் தன் சீடர்களுடன் பழனியம்பதியில் இருந்து வான மார்க்கமாக இரணியவர்மனின் அரண்மனையை அடைந்தார். அவரோடு வந்த சீடர்கள் கட்டுக்கடங்காத தங்கக் கட்டிகளோடு காட்சி தந்தனர். சிதறிய பாறைத் துண்டுகள் வடிவில் அந்தத் தங்கக்கட்டிகள் இருந்தன. அதைப் பார்த்து மன்னன் அதிசயித்துப் போனான். போகரைப் பார்த்து, "சித்தர்பிரானே! என்ன இதுவெல்லாம்" என்றும் கேட்டான்.

"அதெல்லாம் இருக்கட்டும். எங்கே என் சீடன் கருவூரான்" எனக் கோபமாகக் கேட்டார் போகர்.

"அவர் உங்கள் சீடரா? சிறையில் இருக்கிறார்" என்றான்.

"எனக்கு அவன் சீடன். ஆனால் உனக்கு அவன் குரு"

"குருவா!" "ஆமாம் உன் ஊனக் கண்களைத் திறக்கப்போகிறவன் அவன். அப்படியானால் அவன் உன் குருதானே?"

பட்டம் பதவிக்குப் பறக்காதே. அவை தாமே பறந்துவந்து உன் மடியில் விழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர் பிரானே! உங்கள் கோபமான பதில் எனக்கு வியப்பைத் தருகிறது. நான் சிவனடியார்களை அந்தச் சிவபெருமானாகவே கருதிப் போற்றுகின்றவன். அப்படித்தான் உங்கள் சீடரையும் கருதினேன். ஆனால் அவர் என் விருப்பம் தெரிந்திருந்தும் தவறிழைத்து விட்டார்.

"நிறுத்து உன் பேச்சை! சிற்ப சாத்திரம், ஆலய ஆகமம், உலோக சாத்திரம் மற்றும் சூட்சுமம் எனச் சகலத்தையும் தாயின் கற்பத்திலிருந்தபோதே கற்றுத் தெளிந்தவன் கருவூரான். ஒரு பொன் உருவுக்காக நீ ஏங்குவதை அறிந்து நானே அவனை இங்கு அனுப்பி வைத்தேன். செப்புக் கலக்காது தூய பொன் கொண்டு எந்த உருவத்தையும் செய்ய ஏலாது. கோடை காலத்தில் வெப்பம் தாங்காது குழைந்து கொடுத்து மேனியானது கோணியாகி விடும். இது ஆபரணங்களுக்கும் பொருந்தும். ஆபரணம் குழைந்தால் அணியாமல் உருக்கிப் போட்டு விடலாம். ஆனால் ஆலய வழிபாட்டுக்குரிய திருமேனிகள் குழையக்கூடாது. இறை ரூபங்கள் குறித்த ஞானம் உனக்கில்லாததால் நீ என் சீடனைப் புரிந்து கொள்ளவில்லை. இறை ரூபங்களுக்குள் தத்துவங்கள் ஒளிந்திருக்கும் என்பதை முதலில் நீ புரிந்துகொள். ஒவ்வொரு தோற்றத்துக்குப் பின்னாலும் பெரும் பொருள் உள்ளது. வேதியர், ஞானியர் அந்த மூர்த்தத்தைப் பார்த்த மாத்திரத்தில் அதன் பொருளை உணர்ந்து தத்துவத்தைப் புரிந்துகொள்வார்கள். பழநியம்பதியில் முருகன் கையில் இருக்கும் தண்டமாகிய கோல் சொல்லும் பொருளுக்கும், மதுரை மீனாட்சியம்மன் கரத்தில் வீற்றிருக்கும் கிளியானது உணர்த்தும் பொருளுக்கும் வேறுபாடு உண்டு.

தட்சிணாமூர்த்திக் கோலம் சின் முத்திரை காட்டி நிற்கும். அது சொல்லில் ஏதுமில்லை. அமைதியில்தான் எல்லாம் உள்ளது என்பதோடு "சும்மாயிரு" என்று கூறுகிறது. திருமாலின் சயன கோலத்தில் பெரும் பொருள் புதைந்து கிடக்கின்றது. பொன்னின் குணம்பற்றி எவ்வளவோ அறிய வேண்டியுள்ளது. இவற்றைக் கசடறக் கற்றுத் தெளிந்தவன் கருவூரான். என்ன ஒரு மமதை இருந்தால் அவனைப் பொற்கள்ளனாக்கி சிறையிலடைத்திருப்பாய்?

போகரின் கேள்வி மன்னனை ஒரு புரட்டுப் புரட்டிப்போட்டது. கருவூரரை அந்தகாரச் சிறையிலடைத்து ஒரு நாளிகைகூட ஆகவில்லை. பக்கத்திலிருந்து பார்த்ததுபோல போகரால் எப்படிக் கூறமுடிந்தது. என்ன யோசனை? "சித்தம் தெளிந்து நீயும் சித்தனாகு" உனக்குப் பல உண்மைகள் யாரும் கூறாமலே புரிந்துவிடும். கருவூரானை உன்னிடம் அனுப்பி வைத்த பிழையை இதோ நானே சரிசெய்யப் போகிறேன். சித்தனுக்கு மனம் பொன்னாக இருப்பதே கணக்கு. இந்த மண்ணின் பொன் எல்லாம் தூசுக்குச் சமம். கொண்டு வா அந்தக் கருவூரான் செய்த பொற்சிலையை! துலாபாரத் தராசில் ஒரு பக்கம் அதை வை. இதோ இந்தப் பொன் கட்டிகள் எடைக்கு எடை எடுத்துக்கொள். எங்கே கருவூரான்? அவனை விடுதலை செய்.

போகரின் கோபம் மன்னனைத் திகைக்க வைத்தது. பொற்சிலையும் ஒரு பக்கத் தராசில், பொற்கட்டிகள் மறுபக்கமும் கொட்டப்பட்டன. மன்னனுக்குத் தன் தவறு தெரிந்தது. ஆனால் போகரின் ஆவேசத்தை எதிர்கொண்டு அவரை சமாதானப்படுத்தத் தெரியவில்லை. உடனே கருவூராரை விடுவிக்கச் சொன்னான்.

*எழுதி வைக்காத கணக்கும் உழுது விதைக்காத நிலமும் ஒருபோதும் உருப்படாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அந்தகாரச் சிறைக்குள் அவரைக் காணவில்லை. இது அடுத்த அதிர்ச்சி. உன் பொன்னைத் தந்துவிட்டேன். எங்கே என் கருவூரான்? என போகர் இடி இடித்தார். சித்தர் பெருமானே! அவரைச் சிறையில் அடைத்த தவறை உணர்கிறேன். உங்களைப்போல் உண்மையை உணர்த்துவார் இல்லாததால் நிகழ்ந்த பிழை. உண்மையில் அவர் எவ்வாறு மாயமானார் என்று எனக்குத் தெரியவில்லை. தாங்கள் எனக்கு எடைக்கு எடை தங்கமும் தரத்தேவையில்லை. இந்தப் பொன்மூர்த்தியே எனக்குப் போதும். இந்தத் திருவுருவம் பல உண்மைகளை இனி உணர்த்தியபடி வழிபாடு கொள்ளட்டும். என் பிழையை அருள்கூர்ந்து மன்னியுங்கள்! என்று உருக்கமாக மன்னன் வேண்டிநின்றான்.

அதனபின் போகரும் சற்று அமைதியானார். அதனபின் அந்தகாரச் சிறைக்கு வெளியே நின்று, கருவூரா! வெளியே வா! உணர வேண்டியவற்றை உணரவேண்டியவர்கள் உணர்ந்து விட்டார்கள்" என்றார். கருவூராரும் புன்னகைத்தபடியே வெளியே வந்து போகரின் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். அப்படியே அனைவருமாகச் சென்று நடராஜ திருமேனியை வணங்கினர். அப்போது மன்னன் இந்தத் தங்கக் கற்கள் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன என்று கேட்டான்.

தங்கச் சுரங்கம் எதிலாவது இருந்து எடுத்துவரவில்லை. பழனியம்பதியின் பாறைக் கற்கள்தான் இவை. ரஸவாதத்தால் இவற்றைத் தங்கமாக்கினேன். ரஸவாதத்தால் எப்படிக் கற்களைத் தங்கமாக்க முடியும்.

"அது சித்த விஞ்ஞானம் மன்னனே!" இந்த மண்ணில் ஒவ்வொன்றுக்கும் ஒரு குணம் உண்டு. அந்தக் குணப்பாட்டை வேதி மாற்றத்தால் மாற்றும் முறையே ரஸவாதம்.

"அது எப்படிச் சாத்தியம்!"

உயிரின் மூலத்தையே அறிந்துகொண்ட சித்தனுக்கு இதுவா பெரிது. என் வரையில் ரஸவாதத்தைவிடப் பெரியது நவபாஷாணமும் அதன் மூலமாக உருவாகப் போகும் திருமேனியும்தான். பழனி முருகனின் மூலத் திருமேனி போகர் மூலம் உருவானதே!

தெளிவறியாதார் சிவனை யறியார்
தெளிவறியாதார் சிவனு மாகார்
தெளிவறியாதார் சிவமாக மாட்டார்
தெளிவறியாதார் தீரார் பிறப்பே.

-திருமந்திரம். (தொடரும்...

---

தேனீயைப் போலவும் எறும்பைப் போலவும் உழைத்து உண்ணப் பழகிக்கொள். அதுவே உனக்கு மன அமைதியைத் தரும். உன் செல்வம் அழியாமல் இருக்கவேண்டு மென்றால் நீ மூன்று செயல்களில் மிகக் கவனமாக இருக்கவேண்டும்.

01) ஏழைகளின் கண்களிலிருந்து நீர் வரவொட்டாமல் நடந்துகொள்ள வேண்டும்.
02) பிறரது பொருள் உனக்கு வந்துவிட வேண்டுமென்று கனவிலும் கருதக்கூடாது.
03) நியாயமல்லாத எந்த வழியிலும் பொருள் சேர்க்கக் கூடாது.

*அஞ்சாமை நெஞ்சில் வேண்டும். துஞ்சாமை கண்ணில் வேண்டும்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



ஆடிமாத ஞானச்சுடர் வெளியீட்டுரை மதிப்பீட்டுரை நிகழ்த்தியவர்களுடன் சிறப்புப்பிரதிபெற்ற அன்பர்கள்



எதை நீ நம்புகிறாயோ அதுவாகவே நீ இருப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா பூவரசங்குளம் ஸ்ரீ பாலமுருகன் ஆலய அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கின்ற 30 மாணவர்களுக்கு 70,000. 00 ரூபா பெறுமதியான சீருடைகள் வழங்கப்பட்டன.



நாட்கள் கற்றுத் தராததை வருடங்கள் கற்றுக்கொடுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/ கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் தரம் 08இல் கல்வி கற்கும் மாணவிக்கும், தெல்லிப்பளை, மாவிட்டபுரம் பகுதியைச் சேர்ந்த யா/ யூனியன் கல்லூரியில் உயர்தரம் கற்கும் பாடசாலை மாணவிக்கும் துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.




செய்த வினையும் செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக மாணவர்களுக்கு கழுத்துப்பட்டி வழங்குவதற்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.
சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு நாகதம்பிரான் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக 50புட்டி அரிசி மரக்கறிகளுடன் 50,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டது



கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முள்ளியவளை
கேப்பாபிலவு
குடியிருப்பைச் சேர்ந்த
சூரி முன்பள்ளியில்
கல்வி கற்பிக்கும்
ஆசிரியைக்கு
துவிச்சக்கரவண்டி
வழங்கப்பட்டது.


சங்கானை பிரதேச
வைத்தியசாலையின்
கோரிக்கைக்கு
அமைவாக நரம்பியல்
புனருத்தாபன
பிரிவுக்குரிய பக்கவாத
நோயாளிகளுக்கான
சிகிச்சை இயன் மருத்து
வருக்கு வேதனம்
வழங்குவதற்கு 70,000
ரூபா நிதி
வழங்கப்பட்டது.




சத்தியம், தர்மம், உண்மை, அகிம்சை ஆகியவையே உண்மை மனிதனின் வெற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவிக்கும், கனகராஜன்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவிக்கும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.



உண்மையாகத் தியாகம் செய்வதினால் மட்டுமே பிறரின் உள்ளங்களை வெல்ல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

அழகே வடிவான மோகினியாக வந்த நாராயணனின் காருண்யமும் பரமேஸ்வரனின் சாந்த குணமும் ஒன்று சேர்ந்த ஜோதியில் தோன்றியவரே ஐயப்ப சுவாமிகள் ஆவர். இவரை ஹரிஹரபுத்திரன் என்றும் சாஸ்தா என்றும் ஐயனார் என்றும் அழைக்கின்றோம்.

ஐயன் என்றால் "மதிப்புக்குரிய" என்று பொருள். சாட்சாத் பரமேஸ்வரனுக்கும் சௌந்தர்யம் நிறைந்த நாராயணனுக்கும் உதித்த குழந்தையாகிய ஐயப்பன் மதிப்புக்குரியவர் என்பதில் ஐயம்தான் ஏது? சந்தேகமா?

சிவனாரின் ஞானமும் தபசும் விஷ்ணு பகவானின் சௌந்தர்ய சக்தியும், ஒவ்வொருவரது வாழ்வும் உய்வுபெற வேண்டியவை. இந்த இரண்டும் கலந்த அம்சமே ஐயப்ப சுவாமிகள். எனவே அவரை நம்பி வழிபடுவோருக்கு வாழ்வில் உய்வுபெற வாய்ப்புக்கள் ஏராளம். இத்தனை மரியாதைக்குரிய பதமாக "ஐயன்" என்ற சொல்லையே தனது திரு நாமமாகக் கொண்ட ஐயப்பன் பொதுவாக தமிழ் நாட்டிலே கிராமப்புறக் கோயில்களிலே வணங்கப்படும் தெய்வமாக அமைந்துள்ளார். சபரிமலை, சாத்தனூர் என்னும் இடங்களிலே முக்கியம் வாய்ந்த தெய்வமாக விளங்குகின்றார் ஐயப்பன். தமிழ் நாட்டிலே கிராமத்துக்கு கிராமம் ஐயனார் கோயில்கள் ஏராளமாக உண்டு.

ஐயப்பன் எம்மைக் காக்கும் தெய்வம். துன்பம் தரும் பலவித சக்திகளிலிருந்து காப்பாற்ற நாராயணனிடமிருந்து அனைத்து சக்திகளைப் பெற்றுள்ளார் இவர். அத்தோடு ஈஸ்வரனிடமிருந்து ஞானத்தையும் பெற்றுள்ளார்.

கேரளத்தில் சபரிமலையில் எட்டாத உயரத்தில் அமர்ந்தருளிய ஐயப்பன் இப்பொழுது தமிழ் நாட்டிலேயும் தன் கிருபா நோக்கத்தைத் திருப்பியுள்ளார். தமிழ் மக்களிடம் ஐயப்ப பக்தி ஒரு அருமருந்தாக அமைந்துள்ளது.

எமது நாட்டில் ஐயப்ப வணக்கமும் சாஸ்தாபீடமும் அமைந்துள்ளமை எமக்கு நல்லதோர் எதிர்காலம் உண்டு என்பதைக் காட்டுகின்றது எனலாம்.

ஐயப்பன் ஸ்ரீ ஹரிஹர புத்திரன் ஆவார். இவரை தமிழ் மக்கள் பெரும்பாலும் கிராம மக்கள் காவல் தெய்வமாக நகரின் எல்லையில் வைத்து மிக்க பயபக்தியோடு படையல் இட்டு வணங்கி வருகின்றனர். இவ்வழிபாடு இந்து சமய வழிபாட்டோடு இணைந்து உள்ளது.

ஆரம்ப காலச் சைவம் என்று எடுத்துக்கொண்டால் ஆதியில் இந்து நதிக்கரை நாகரிகமே சிறந்து விளங்கியது. ஹரப்பா, மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சிகளின்போது சிவபிரானது உருவங்களும் இடபத்தின் சின்னங்களுமே காணப்பட்டன. இந்து நதியை அண்டி வாழ்ந்த இந்துக்களின் வழிபாடே ஆரம்பத்தில் இருந்தது. சில சமயம் அதிமேன்மையும் பெற்றிருந்தது.

*எளிமையும் கட்டுப்பாடும் நற்பண்பும் சேர்ந்தால் யாராலும் வெல்ல முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில் ஆரியப் படையெடுப்புக்களின் காரணமாக சிலைகளும் பல தெய்வ வழிபாட்டு முறைகளும் அறிமுகமாயின.

சைவத்தின் வழிபாட்டு முறையில் அருவ, உருவ, அருவுருவ வகைகள் உண்டு. உருவ வழிபாட்டு அவயங்கள் சிவலிங்க வழிபாடுகளின் முதிர்ச்சி நிலையில் எழுந்த, மனதில் இறையை இருத்தி வணங்கும் மானஸ வழிபாடு ஆகியவையே இம் மூன்றுமாம்.

கிராம மக்கள் ஐயப்ப சுவாமியை பக்தி உணர்ச்சி பொங்க படையல் செய்து வழி படும் காட்சி அமைதியும் பய பக்தியும் கலந்த நிறைவான ஒரு காட்சி ஆகும்.

ஐயப்பனாரின் பிரமாண்டமான சிலை வடிவங்களை தமிழ் நாட்டு கிராமங்கள்தோறும் காணலாம். ஐயப்ப வழிபாடு தொன்மையானது என்பதற்கு சங்க இலக்கியங்களில் வரும் சாத்தனார் என்னும் பெயருடைத் தெய்வமே சான்றாகும். ஐயப்பன் இவரே எனக் கருத இடமுண்டு. ஒட்டக்கூத்தனாரின் "தக்கயாக பரணி"யில் சாத்தனுக்கு நெல்லும் மாமிசமும் படைக்கப்பட்டன என்று கூறப்பட்டுள்ளது. குலோத்துங்கன் காலத்திலிருந்து ஐயப்ப வழிபாடு இருந்து வந்தமைக்கு நூல்கள் சான்று பகர்கின்றன.

விஞ்ஞானமும் நாகரிகமும் ஓங்கி வளர்ந்துவிட்டபோதிலும், மக்களின் தொன்மை வாய்ந்த பழக்கங்கள், பண்பாடு, வழிபாட்டு முறைகள், யாவும் பாரம்பரியங்கள் மாறாது, வழி வருவதால்தான், கிராமப் புறங்களில் நகர்புறங்களிலும் பார்க்க ஆன்மீகம் வேர்விட்டு நிலைத்து நிற்கின்றமை கண்கூடு.

நெஞ்சம் நிறைந்த நம்பிக்கையோடும் உற்சாகம் நிறைந்த மன நிறைவோடும் நாம் ஐயப்ப சுவாமியை வழிபடின் எமக்கு காவல் வேறு தேவையில்லை.

---

## தேரேறு

ஆற்றங்கரை வேலவனே தேரேறு
அனுபவிக்கும் துயர் நிறுத்த தேரேறு
மாற்றங்கள் தந்துஎமை ஆள தேரேறு
மனிதத்தை காவல்செய்ய தேரேறு
வேற்றுமையை பூமியில் விலத்த தேரேறு
விடிவுக்கு வழிகாட்ட தேரேறு
தோற்காத இனத்தின் தலைவனே தேரேறு
தொண்டைமானாற்றங் கரையில் தேரேறு
ஏற்றதோர் தீர்வுக்கு வழிகாட்ட தேரேறு
ஈழத் தமிழினத்தில் காவலனாய் தேரேறு
பூவரச மரத்தில் குடியிருப்பவனே தேரேறு
புதுயுகத்தை வாழ்விக்க தேரேறு
ஆவலுடன் உனை சரணடைந்தோம் தேரேறு
அன்னதானக் கந்தனே அபயம் செய்து தேரேறு.

*-காரை எம்.பி. அருளானந்தன்-*

*கருணை காட்டும் குணம் கடவுள் உங்களுக்கு அளித்திருக்கும் மிகப்பெரிய பரிசு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# ஞானஞாயிறு நாவலர் பெருமான்

**– திரு ச. தண்டபாணி தேசிகர்** அவர்கள் –

**சொற்பொழிவில் இவர்கட்கு என்று தனித்த பாணி**

இக்காலத்திலே பல மேடைப் பேச்சாளர்களைப் பார்க்கிறோம். ஏன் உபதேச குரு மூர்த்திகளாக இருக்க வேண்டியவர்கள் கூட உபந்நியாசகர்கள் ஆகிறார்கள். பேச்சுக்களோ தண்ணீரிற் கலந்த பாலாக உள்ளது. நாம் அன்னப் பறவையாக இருந்தால், மலைகெல்லி எலியைப் பிடிப்பதுபோல, பெருமுயற்சி செய்து சில கருத்துக்களை உணரலாம். அன்றியும் எத்தனை ஏச்சுக்களும் ஏத்துதலும் தூற்றுதலும் உள்ளன. இவற்றிற்கும் பேச்சின் தலைப்பிற்கும் ஒரு தொடர்பும் இராது. இவர்கள் பேச்சோ எடுத்த பொருளுக்கு ஏற்றதாக- தரம் குறையாததாக- போற்றுதலும் புகழ்ச்சியும் கொண்டு ஆட்களை ஏய்க்காததாக - உண்மைக்கு உறைவிடமாக இருக்கும் என்றும், இடையே மக்களை நகைக்கவேண்டும் என்பதற்காகக் கோமாளித்தனமும் குறும்பும் கலந்து பேசமாட்டார்கள். "நாம் பேசுவது சிவத்தையும் - சிவனடியாரையுமே. இதில் நகைச்சுவைக்கு இடம் எங்கே" என்பார்கள். என்றும், அன்றியும், "ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய வழுக்கியும் வாயாற் சொலல்" என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்காக இருக்கும் என்றும், இராமநாதபுரம் பொன்னுச்சாமித்தேவர் அவர்கள் பாராட்டுவார்கள் என்று சிவசாமிச் சேர்வைகாரர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

புராணங்களைப் பிரசங்கிப்பதில் இவர்கள் கையாண்ட முறையே தனிமையானது. ஏடு வாசிப்பவரை வரலாற்றுச் சந்தர்ப்பத்திற்கும், பாடலுக்கும் ஏற்ற இராகத்திற் படிக்கச் செய்து தாமும் அதே இசையிற் பயன் சொல்லுவார்களாம். அதிலும் பொழிப்புரை, கருத்துரை, அருஞ்சொல் பொருள், சொல் நயம் பொருள் நயங்கள், சாத்திரக் கருத்துக்கள், திருமுறை மேற்கோள்கள், இலக்கணக் குறிப்பு - இந்த முறையிலேயே பயன் சொல்லுவார்களாம். யாரேனும் விரைந்தெழுதுவாரோ, பதிவு செய்வாரோ இருந்து எழுதினால் அழகான உரை நூல்கள் பலவற்றைத் தமிழுலகம் பெற்றிருக்கக்கூடும் என்று சிதம்பரம் வாமதேவ முருகப் பட்டாரகர் மொழிவார்கள் என அவர்கள் மகனார் தமிழாசிரியர் மாணிக்கபட்டாரகர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

1920ஆம் ஆண்டில் தலைமையாசிரியராக விளங்கிய ம.க. வேற்பிள்ளை ஐயா அவர்கள் கந்தபுராணம் முழுமையும் வைதிக முறைப்படி பாடம் சொல்லக் கேட்கும் பேறு எங்கட்குக் கிடைத்தது. அதில் அவர்கள் சொன்ன சில குறிப்புக்களைத் தருகின்றேன்.

நொத்தாரிசு பொன்னையா உபாத்தியாயர் அவர்கள் நல்லூர்க் கந்தசாமி கோயிலிலே வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளிலும், சிறப்பு நாட்களிலும் கந்தபுராணம் படித்துப் பயன் சொல்லிக்கொண்டு வந்தார்களாம். ஒருநாள் அவர்கட்கு உடம்பு நலமில்லையாம். ஆதலால், பயன் சொல்லும் முறை முட்டுப்பட்டதாம். கோயில் நிர்வாகிகள் நொத்தாரிசு ஐயாவைக் கண்டு தங்கள் நிலையிற் சொல்லுவார் யாரும் இல்லையே! இந்நிகழ்ச்சி இரண்டொரு

*இளமை தவறான பலவற்றை நம்புகிறது. முதுமை சரியான பலவற்றை சந்தேகிக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களுக்கு நிறுத்தி வைத்தால் என்ன என்று கேட்டார்களாம். அப்போது ஐயா அவர்கள், "நிறுத்திவிடலாம் இன்று சுக்கிரவாரம் திருக்கல்யாணப்படிப்பு இதனை எண்ணிப் பல்லாயிர மக்கள் கூடுவார்களே! நாம் முன்னரே அறிவியாமையால் ஏமாற்றமாக அல்லவா முடியும். நாம் அதனைச் செய்ய விரும்பவில்லை. இருக்கட்டும். நமது கந்தப்பிள்ளை மகன் இருக்கிறார். அவர் நன்றாகப் பயன் சொல்லுகிறார் என்று கேள்வி. அவரை இன்று சொல்லச் செய்தால் என்ன?" என்றார்களாம். கோயில் அதிகாரிகள் நாவலர் ஐயா அவர்களிடம் தெரிவிக்கவே, அவர்களும் "திருவருள்" என ஒத்துக்கொண்டார்கள். மேடைக்கு வந்தார்கள், "திகடசக்கர" எனக் காப்புச் செய்யுளைக் கூறினார்கள். திருவருள் அனைவர் காதிலும் செய்யுளோடு கலந்து பாய்ந்தது. எடுத்த எடுப்பிலேயே சபை களைகட்டியது. இளைஞர் இவ்வளவு நன்றாகப் பயன் சொல்கிறாரே என்று எல்லோரும் வியந்து பார்த்துக்கொண்டேயிருந்தனர். சபை களைகட்டி இருப்பதை மக்கள் வியந்து கொண்டாடுவதையும் சிலர்மூலமாகச் செவியுற்ற நொத்தாரிசு ஐயா அவர்கள், தம் நோவையும் மறந்து தூண் மறைவில் வந்திருந்து கேட்டார்களாம்.

அப்போது இமயமலையரசன் உமாதேவியாரைச் சிவபெருமான் திருக்கரத்தில் ஒப்புவித்துத் தத்தம் செய்து கொடுக்கும் பகுதியாகிய

"பூசனை புரிந்த பின்னர்ப் புவன மீன்றாள் தன் கையைப்
பாசம் தகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமொ டளித்தேன் என்னா நெடுமறை மனுக்கள்கூறி
வாசநல் லுதகம் உய்த்தான் மருகன் என்றவனை உன்னி"

என்ற பாடல் நடந்துகொண்டிருந்தது. நாவலர் ஐயா அவர்கள் "மருகன் என்றவனை உன்னி" என்ற பகுதிக்கு "எங்குள பொருளுங் கோளும் ஈதலும் தானேயாகும் சங்கரனை மருமகன் என்று எண்ணித் தருக்கொண்டு தன்தலையிழந்து ஆட்டுத்தலையைப் பெற்றவனாகிய தக்கனை மனதிலே எண்ணி, அத்தகைய அவல நிலை தனக்கு என்றேனும் நேர்ந்துவிடக் கூடாதே என அஞ்சித் தத்தம் செய்து கொடுத்தான்" என்று பயன் கூறி, "என்றவன்" வினை யாலணையும் பெயர் எனவும் இலக்கணமுங் கூறினார்களாம். இருந்து கேட்ட அறிஞர்கள் அனைவரும் அற்புதம் அற்புதம் என வியந்தார்களாம். தூண் மறைவில் உடல் வருத்தத் துடனிருந்த நொத்தாரிசு ஐயா அவர்களும் மனநிறைந்த மகிழ்ச்சியால், தாம் மறைவிலிருந் ததையும் மறந்து, "ஆகா" எனச் சத்தம் இட்டார்களாம். நாவலர் ஐயா அவர்கள் சிறிது துணுக்குற்று நாண, நொத்தாரிசு அவர்கள் "மிக நன்றாக இருக்கிறது. கச்சியப்ப சிவனார் திருவுளக்கிடக்கை இதுதான்" என்று பாராட்டினார்கள். அது முதல் நொத்தாரிசு ஐயா அவர்கள் வர இயலாத போதெல்லாம் இவர்கட்கே வாய்ப்புக்கிட்டுவதாயிற்று.

இரண்டொரு நாட் கழித்து, திருவவதாரப் பகுதிக்குப் பயன் சொல்லும் வாய்ப்பும் இவர்கட்கு வழங்கப்பட்டது. இதுகேட்ட மக்கள் இன்றும் ஓரமுத மழையும் அரதனக் குவியலும் கிடைக்கப்போகிறது என்று திரளாகக் கூடியிருந்தார்களாம். அப்போது "அருவமும் உருவுமாகி" என்ற கந்தப் பெருமான் திருவவதாரக் கவி படிக்கப்பட்டதாம். அதில் "முருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாங்கு உதித்தனன்" என்ற பகுதிக்கு "முற்கூறிய திருமேனிச் சிறப்புக்களுடன் எழுந்தருளி வந்ததுபோலத் தோன்றினார்" எனப் பயன் கூறி, "வந்தாங்கு" என்பதில் "ஆங்கு" உவம உருபு என இலக்கணக் குறிப்புக் கூறினார்களாம். இதுவரை மக்கள் "முருகன் வந்து ஆங்கு உதித்தனன்" எனப் பிரித்து "முருகப்பெருமான் வந்து அவ்விடத்துத் தோன்றினார்" என்ற உரையையே கேட்டவர்கள். அவர்கள் சிந்தையில் "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" ஆகையாலே முருகன், வந்ததுபோலத் தோன்றினார் என இறைவனுக்குள்ள நித்திய சுதந்திரமும் பரத்துவமும் கெடாத வண்ணம் உரை கூறியதற்காக உள்ளம் பூரித்தார்களாம். இங்ஙனம் பல உரைக் குறிப்புக்களை உதவினார்கள், ஆசிரியர் ம.க. வேற்பிள்ளை அவர்கள்.

**பதிப்பருமைக்குச் சில நிகழ்ச்சிகள்**

வில்லிபுத்தூரர் பாரதத்தை அச்சிடத் தொடங்கிய காலம். ஆதிபருவத்தில் குருகுலச் சருக்கம் அச்சாகிக் கொண்டிருந்தது. சதாசிவப்பிள்ளை அவர்கள் இரண்டு ஏடுகளை எடுத்துக்கொண்டு வந்து ஐயா அவர்கள்முன் நின்றார். ஒரு பகுதியைக் குறித்துக்காட்டி, "எது, சிறந்த பாடம்? எதனைப் போடுவது?" எனக் கேட்டார். நாவலர் ஐயா அவர்கள் இரண்டு ஏடுகளையும் வாங்கிப் பார்த்தார்கள். குறித்த பகுதி கன்னன் பிறப்பைப் பற்றியது. ஒன்றில், "இந்திராதியர் அவரவரிரந்தன தரத்தக்க மைந்தனானவன் தன்னைப் பயந்தனன்" என்றிருந்தது. மற்றொன்றில், "இந்திராதிபர் அவரவரிரந்தன தரத்தக்க மைந்தனானவன் தன்னைப் பயந்தனன்" என்றிருந்தது. நாவலர் ஐயா அவர்கள் சிறிது நேரம் சிரித்துவிட்டு, "நீர் சிறந்த பாடம் எது எனக் கருதுகிறீர்?" எனக் கேட்டார்கள்.

சதாசிவப்பிள்ளை அவர்கள் "இந்திரன் முதலான தேவர்கள் இரந்தனவற்றைத் தரத்தக்க மைந்தன் எனப் பொருள் தருவதால், இந்திரன் கவச குண்டலங் கேட்ட வரலாறும் துணை செய்வதால் இந்திராதியர் என்ற பாடமே சிறந்தது" என்பது என் கருத்து என்றார்கள்.

ஐயா அவர்கள் சிரித்துக்கொண்டே, "அப்படியா? மீளவும் சிந்தித்துப் பாரும். மற்றதையும் பாரும். வேறும் சிறப்புத் தோன்றலாமே!" என்றார்கள்.

பிள்ளையவர்கள் சிறிது நேரம் சிந்தனை செய்து, "ஒன்றும் புலப்படவில்லையே" என்றார்கள்.

நாவலர் ஐயா அவர்கள், "காவியம் என்றால் பின் பின் நிகழும் நிகழ்ச்சிகளை முன்னரே குறிப்பாக உணர்த்தும் உயர்வு அமைந்தது. இதனை அணியிலக்கண ஆசிரியர்கள் "பீஜம்" என்பர். "இந்திராதிபர்" என்ற பாடம் கண்ணன் புண்ணியத்தை யாசித்ததையும், இந்திரன் கவசகுண்டலங்களை யாசித்ததையும் ஒரு சேரக் குறிக்கும் சொற்றொடர். ஆகவே, இரு பொருளும் ஒருங்கு அமைய இந்திரா - திருமகள் இந்திராதிபர் - திரு மகள் கேள்வனாகிய கண்ணபிரான். இந்திரா அதிபர் - இந்திரன் முதலான திக்குப் பாலகர்களும் தலைமை பூண்ட பிற தேவர்களும், இங்ஙனம் இரு வரலாறுகளையும் விளக்குவதால் இந்திராதிபர் என்ற பாடத்தையே துணிந்து போடலாமே" என்றார்களாம். கன்னபருவம் அச்சாகிக் கொண்டிருந்த நேரம். பிள்ளையவர்கள் ஐயா அவர்களிடம் வந்து "ஓர் ஐயம்: கன்னன் ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கை யகத்ததோ புறத்ததோ அறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் போர்க்களத்திற் கிடக்கிறான். அப்போது கண்ணன் இரவல் அந்தணனாக வந்து "நீ செய்த புண்ணியம் அனைத்தும் உதவுக" எனக் கேட்கின்றாரே! இது நியாயமா? இதனையறிந்து கொள்ள விரும்புகிறேன்" என்றார்கள்.

நாவலர் ஐயா அவர்கள், தம்பி! நீ கேட்பது நல்ல இடம். கன்னன் தான தருமங்களாகிய பசு புண்ணியம் பல செய்தவன். அவன் விரும்பியதோ ஏழேழு பிறப்பிலும், இல்லையென்று உரைப்போர்க்கு இல்லையென்றுரையா இதய நீ அளித்தருள் என்பதே. கண்ணனுக்கோ அவனுக்குத் தன்நிலையாகிய பரமபதத்தையளிக்க வேண்டும் என்பது. ஆகையால் பயன் கருதிச் செய்த பசு புண்ணியப்பலன் பொன் விலங்குபோல மறு பிறவிக்கு ஏதுவானது. அதனையும் அவனுடைய கருவி கரணங்கள் சுழன்று, செயலற்றுச் சிந்தை ஓய்ந்து இருக்கிற நிலையிலே நிட்காமியமாக்கத் தாம் பெற்றுக்கொண்டால் அவனைப் பரமபதம் சேர்க்கலாம் என எண்ணிய கண்ணன் கருதிய கருணைச் செயல் எனக் கொள்ளலாமல்லவா?" என்றார்களாம்.

இங்ஙனம் பாடஞ் சொல்லுங் காலத்தும், பதிப்பித்த காலத்தும் சொன்ன நயங்கள் பல என்று ஆசிரியப் பெருந்தகை ம.க. வேற்பிள்ளை ஐயா அவர்களும் பொன்னோதுவா மூர்த்திகள் அவர்களும், முருகபட்டாரகர், சொக்கலிங்க ஐயா முதலியவர்களும் சொன்ன வியக்கத்தக்க பகுதிகள் பல. அவற்றைத் தொகுத்துச் சிந்தித்தாலே பல நூற் பெருமைகளையறிய வாய்ப்பாகலாம்.

இவ்வண்ணம் தம் வாழ்க்கையைத் தவவாழ்க்கையாக மாற்றிச் சிவம் பெருக வாழ்ந்த நாவலர் பெருமானுக்குச் சிலை எடுத்தலும் சிந்தனையில் இருத்துதலும் செந்தமிழ்ச் சைவ மக்கள் செய்யவேண்டிய கடமைகளிற்றலையாயவை.

"நாவலர் பெருமான் புகழ் வாழ்க, சிலையமைக்கும் செல்வர்கள் சிறந்து வாழ்க!

***நன்றி: நாவலர் 200ஆம் ஆண்டு சிறப்புமலர்.*** (முற்றும்)

---

## இறைவனின் கணக்கு

அர்ச்சுனனும் பகவான் கிருஸ்ணனும் முரட்டுத்தனம், அகந்தை, ஆடம்பரம் ஆகிய தன்மைகளை உடைய ஒரு பணக்காரனைக் காணச் சென்றனர். பகவான் கிருஸ்ணன், "உனக்கு ஐந்து கோடி ரூபாய் கிடைக்கட்டும்" என அவனை வாழ்த்தினார்.

பிறகு அவர்கள் மிகவும் ஏழையான வயோதிக பக்தன் ஒருவரைக் காணச் சென்றனர். பகவான் கிருஸ்ணர், "உம்மிடம் உள்ள ஒரே ஒரு பசுமாடும் இறந்து போகட்டும்" என்று கூறினார்.

அர்ச்சுனனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. "பகவானே, உனது உண்மை இயல்பினை அறிந்துகொள்ள என்னால் இயலவில்லை. உம்மை அவமதித்த பணக்காரனை வாழ்த்தி அருள் புரிந்தீர்கள். உங்களுக்குத் தொண்டு செய்த ஒருவருக்கு சாபமிட்டிருக்கின்றீர்களே!" என்று கிருஸ்ணரைப் பார்த்துக் கேட்டான்.

"பணக்காரன் செல்வத்தின் மூலம் கடுமையான குற்றங்களைப் புரிந்து நேராக நரகத்துக்குச் செல்வான். அந்த ஏழை மனிதன், இந்தப் பசுவினிடத்தில் உள்ள பற்றை விடுத்து விரைவில் என் இருப்பிடத்திற்கு வந்து சேருவான்" என்று சொன்னார் கிருஸ்ணர்.

***அன்பளிப்பு பொருளைவிட அதை அளிக்கும் முறைதான் மதிப்புமிக்கது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| S. குமார் | கனடா | 700,000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| திருமதி பேரின்பதாஸ் | அல்வாய் வடக்கு | 50000. 00 |
| திரு தர்மு ஐயா குடும்பம் | தொண்டைமானாறு | 5000. 00 |
| ம. பிரகாஸ் | கோண்டாவில் | 10000. 00 |
| ச. விஜயசேகரம் | கோண்டாவில் | 10000. 00 |
| சி. நாகரத்தினம் | தெல்லிப்பழை | 10000. 00 |
| த. அக்ஷரா | அல்வாய் | 10000. 00 |
| பா. கலையரசன் | கனடா | 15000. 00 |
| B.R. ரஞ்சன் | யாழ்ப்பாணம் | 30k அரிசி |
| ஸ்ரீ அஸ்வின் | சித்தங்கேணி | 5000. 00 |
| ஸ்ரீதேவி தொலைத்தொடர்பு நிலையம் | அச்சுவேலி | 2மூடை அரிசி |
| யோ. குகதாசன் | நவுக்கிரி | 5000. 00 |
| N. கீர்த்தனா | லண்டன் (கரவெட்டி) | 20000. 00 |
| திரு மகேந்திரன் குடும்பம், திரு மதன் குடும்பம் | துன்னாலை | 5000. 00 |
| S. திருச்செல்வம் | ஜேர்மன் | 10000. 00 |
| து. அனிஸ் | அமெரிக்கா | 30500. 00 |
| சு. சஞ்சீவன் | இலகடி | 5000. 00 |
| மு. பிரதீபன் | ஜேர்மன் | 50000. 00 |
| சிவகாமி குடும்பம் | உடுப்பிட்டி | 10000. 00 |
| ஆ. ஸ்ரீதரன் | பிரான்ஸ் | 10000. 00 |
| த. திரியன் | இணுவில் | 1000. 00 |
| கா. லக்ஷிகா | ஜேர்மன் | 50000. 00 |

*விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வை. ரோஜினி | பிரான்ஸ் | 50000. 00 |
| Y. கருணாகரன் | அச்சுவேலி | 2000. 00 |
| பி. இளங்கோ | சுவிஸ் | 25000. 00 |
| B. பாலேந்திரா | சுவிஸ் | 10000. 00 |
| நா. பாஸ்கரன் | நவுக்கிரி | 10000. 00 |
| சி. முத்துலிங்கம் | சிறுப்பிட்டி | 30000. 00 |
| த. கணேசமூர்த்தி குடும்பம் | பருத்தித்துறை | 3000. 00 |
| S. வேணுகாந் | புன்னாலைக்கட்டுவன் | 3000. 00 |
| ரா. ராணி | புன்னாலைக்கட்டுவன் | 27200. 00 |
| சி. நிஷாந்தன் | தாவடி | 3000. 00 |
| ச. சாய்தா ரமணி, ர. ராஜிந்ராணி | அளவெட்டி | 40000. 00 |
| N.R. சின்னராசா குடும்பம் | இணுவில் | 10000. 00 |
| தே. பிரசாத் | நீர்வேலி | மரக்கறி, 2புட்டி அரிசி |
| க. திருநிரஞ்சன் | தெல்லிப்பழை | 1மூடை அரிசி |
| திரு நாதன் குடும்பம் | இணுவில் | 5000. 00 |
| S. மோகன் | நெல்லியடி | 20000. 00 |
| நி. ஆனந்தகிருஷ்ணன் | கொழும்பு | 20000. 00 |
| S. முருகதாஸ் | கேரளா | 10000. 00 |
| பெ. தம்பிப்பிள்ளை | தம்பிலுவில் | 2000. 00 |
| மா. சிவனேஸ்வரன் | தொண்டைமானாறு | 1மூடை அரிசி |
| M. சரவணபவான் கலைமகள் விலாஸ் | சங்கானை | 25k பருப்பு 1மூடை அரிசி |
| U. பவிஷா | நெல்லியடி | 5000. 00 |
| T. ஆர்விக் | கந்தர்மடம் | 5000. 00 |
| முருகேசு சுவாமிகள் | கீரிமலை | 10000. 00 |
| உ. சஞ்சித் | மல்லாகம் | 10000. 00 |
| N. ராஜ்குமார் | மானிப்பாய் | 5000. 00 |
| அ. சந்திரகாந்தி | இணுவில் | 10000. 00 |
| நா. செல்வராஜா | ஏழாலை | 10000. 00 |
| J. கணாதீபன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சி. அசோகன் | இடைக்காடு | 5000. 00 |
| த. யசோதரன் | உரும்பராய் | 2000. 00 |
| அ. தருணிகன் | இடைக்காடு | 10000. 00 |
| அ. கிருத்திக் | திருநெல்வேலி | 5000. 00 |
| நி. குகசாந், நி. வர்ஷாந் | பண்டத்தரிப்பு | 2000. 00 |
| திருமதி ஜெ. சுவஸ்திகா | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| S. கோணேஸ்வரன் | திருகோணமலை | 4000. 00 |
| த. கேதீஸ்வரன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| க. ஜெயசேகரம் | ஆனைக்கோட்டை | 25000. 00 |

ஒரே இடத்தில் சேரும் மாறுபட்ட பாதைகள்தான் சமயங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| க. சசிகரன் குடும்பம் | வரணி | 20000. 00 |
| K. ஆர்விக் | உரும்பராய் | 5000. 00 |
| திரு சிவபாலரட்ணம் குடும்பம் | ஜேர்மன் | 50 யூரோ |
| திரு சிவனேசன் குடும்பம் | ஜேர்மன் | 10000. 00 |
| பா. சிவலட்சுமி | சுழிபுரம் | 10000. 00 |
| ச. மீனலோஜினி | கனடா | 1மூடை அரிசி |
| அ. விமலாதேவி | கனடா | 5000. 00 |
| அ. அன்னலட்சுமி | பிரான்ஸ் | 5000. 00 |
| திரு மாணிக்கத்தியாகராஜா குடும்பம் | சங்கரத்தை | 20000. 00 |
| சி. கபினாஸ் | இணுவில் | 10000. 00 |
| செ. நடேசபிள்ளை | நீர்கொழும்பு | 2000. 00 |
| S. அழகேஸ்வரி | ஊரெழு | 500. 00 |
| K. சேயோன் | ஊரெழு | 1000. 00 |
| க. சுலோசனா | இணுவில் | 25000. 00 |
| முரளிதரன் காஞ்சனா | அளவெட்டி | 5000. 00 |
| திரு கஜதீபன் குடும்பம் | இணுவில் | 5000. 00 |
| ம. லக்கினேஸ்வரன் | வடலியடைப்பு | 5000. 00 |
| க. சண்முகநாதன் | காரைநகர் | 10000. 00 |
| பா. ஜெயந்திகுமார் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| R. இந்திரா | கண்டி | 1000. 00 |
| T. கனகேஸ்வரன் | நாவலப்பிட்டி | 1000. 00 |
| கதிர்வேலாயுதர் கோயில் | நாவலப்பிட்டி | 1000. 00 |
| சிற்றி ரெக்ஸ் | கண்டி | 2000. 00 |
| Dr யோகானந்தன் | நாவலப்பிட்டி | 5000. 00 |
| M. நவஜோதி | கண்டி | 1000. 00 |
| க. சபாரட்ணம் | நாராந்தனை வடக்கு | 10000. 00 |
| ச. விலோஷன் | மண்டதீவு | 5000. 00 |
| ர. திவாகரன் | கொழும்பு- 13 | 6000. 00 |
| S.K. சண்முகசுந்தரம் | சொய்சாபுரம் | 1000. 00 |
| திருமதி செல்வநாயகம் | லண்டன் | 25000. 00 |
| சி. கிருஷிகா, Dr சிவபாலன் | லண்டன் | 20000. 00 |
| சித்ரா நடராஜா | கொழும்பு | 10000. 00 |
| திரு ரஞ்சன் குடும்பம் | கொழும்பு- 04 | 25000. 00 |
| திரு பார்த்தீபன் குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| இ. தவசீலன் | தம்பசிட்டி | 10k பருப்பு, 2மூடை அரிசி |
| க. ஆருத் | கொக்குவில் | 15000. 00 |
| சி. அருபன் | கரணவாய் | 1புட்டி அரிசி |
| ஐ. கிஷாரா | உடுப்பிட்டி | 5000. 00 |

*பொருளை இழந்தவனுக்கு மிஞ்சியிருப்பது அனுபவம் மட்டுமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செ. சின்னத்துரை<br>த. குணரட்ணராஜா நினைவாக<br>க. நடேசலிங்கம் | உரும்பராய் | 30000. 00 |
| க. நடராசா | இடைக்காடு | 5000. 00 |
| திரு சுரேந்திரன் குடும்பம் | பிரான்ஸ் | 10000. 00 |
| ப. கணேசமூர்த்தி | புத்தூர் | 10000. 00 |
| பாலேஸ்வரி ரவீந்திரன், பாலேந்திரன் சஜிதா | கோண்டாவில் | 10000. 00 |
| திரு பூபாலசிங்கம் குடும்பம் | நீர்கொழும்பு | 10000. 00 |
| ந. மாதுளா | தும்பளை | 20000. 00 |
| வி. தயாநிதி | கிளிநொச்சி | 1000. 00 |
| சி. பரிபூரணம் | கனடா | 10000. 00 |
| சி. குணரட்ணம் | பிரான்ஸ் | 5000. 00 |
| J. வசந்தா | கோயிற்கடவை | 1000. 00 |
| ஸ்ரீ. தசிதன் | தாவடி | 5000. 00 |
| ச. சந்துருதரன் | சங்கானை | 5000. 00 |
| ஜெ. தயாபரன் | கோப்பாய் | 2000. 00 |
| சிவசக்தி மில் | வவுனியா | 35000. 00 |
| திரு செல்வரஞ்சன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| இ. பேரின்பநாயகம் | சுதுமலை | 5000. 00 |
| கு. கேதீசன் | சுன்னாகம் | 30000. 00 |
| ச. சசிரூபன் | கிளிநொச்சி | 10000. 00 |
| பா. கேதீஸ் | உரும்பராய் | 30000. 00 |
| திரு இராசநாதன் குடும்பம் | கொக்குவில் | 5000. 00 |
| ச. ரதிமலர் | காரைநகர் | 1000. 00 |
| திருமதி பி. தர்சினி | உபயகதிர்காமம் | 10000. 00 |
| திரு ஜெயதாசன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 2மூடை அரிசி |
| சு. ஸ்ரீஸ்கந்தராஜா | மாவிட்டபுரம் | தேங்காய், 3 புட்டி அரிசி |
| பத்மநாதன் ரூபதி | சுதுமலை | 25000. 00 |
| கா. மனோகரன் | மானிப்பாய் | 40000. 00 |
| R. சசி | தாவடி | 32000. 00 |
| கி. விநாயகமூர்த்தி குடும்பம் | நவிண்டில் | 45000. 00 |
| S. முருகதாஸ் | கொழும்பு | 10000. 00 |
| இ. பரிபூரணானந்தன் | சுழிபுரம் | 5000. 00 |
| லீலாவதி பழநியாண்டி | கொழும்பு | 1360. 00 |
| க. கஜேந்திரகுமார் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| மோதிலால் நேரு நினைவாக, திருமதி மோதிலால் நேரு மூலம் | அமெரிக்கா | 30000. 00 |
| கு. சண்முகேஸ்வரன் | இணுவில் | 5000. 00 |
| சி. நாகேஸ்வரி | புத்தூர் | 3000. 00 |

(தொடரும்...

*வெற்றியின் ரகசியம் எடுத்த செயலில் நிலையாக நிற்பதுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் அருள்பெற்ற அருட்பெரும் பெண் சித்தர் சடையம்மா

– *அ. நளினாசினி* அவர்கள் –

ஈழத்துச் சித்தர்கள் என்றாலே பல சுவாமிகள்தான் எங்கள் நினைவுக்கு வருவார்கள். ஆனால் ஈழத்து சித்தர் மரபிலே சுவாமிகளும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஈழத்து முதலாவது பெண் சித்தராக அடையாளப்படுத்தப்பட்டவர் அன்புக்கும் வழிபாட்டுக்குமுரிய சடையம்மா அவர்கள். ஆன்மீக வழி அன்பர்களுக்கு அவர் பெண் சித்தராக இருந்தாலும் அனைத்து பெண்களுக்கும் ஒரு முன்னோடியான ஆளுமைமிக்க தமிழ் பெண்ணாக வாழ்ந்தவர் என்பது சடையம்மாவினுடைய ஆராயப்படவேண்டிய இன்னொரு பக்கமாக இருக்கிறது.

1865.09.19 (ஆவணி ரோகினி) நன்னாளில் வீரகத்திப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளுக்கு மகளாக திருநெல்வேலி கிழக்கில் அவதரித்தார். முத்துப்பிள்ளை எனும் பிள்ளைத் திருநாமம் சூட்டி மகிழ்ந்த பெற்றோர் குழந்தைக்கு 11 வயதாகும்போது கதிரேசனார் என்பவரை திருமணம் செய்து வைத்தனர். ஒருமுறை கணவன் நோய்வாய்ப்படவே நல்லூர்க் கந்தப்பெருமான் கனவில் தோன்றி அம்மையாரை வழிப்படுத்தவே, முருகன் கட்டளைப்படி வைரவப்பெருமான் சந்நிதிக்கு கணவனை அழைத்துவந்து 40 நாட்கள் அங்கு தங்கியிருந்து முருகனை வழிபட்டு இருக்கிறார். ஒருமுறை இவர் கடையிற் சுவாமிகளை சந்திக்கப் புறப்பட்டவேளை அவரே நேரில் வந்து “கந்தனை மறவாது வந்தனை செய். அவரே நம் சொந்தம்” என்று ஆசிகூறி சென்ற பின்னர் கணவனும் குணமாகியிருக்கிறார். அதன் பின்னரும் இவர் நல்லூர் கந்தனிற்கு தொடர்ந்து பணிகள் புரிந்து வந்திருக்கிறார்.

இரண்டு பெண் குழந்தைகளுக்கு தாயாகி இல்லறத்தில் இருந்துகொண்டே தன்னைத் தன்னால் அறிந்துகொண்ட அம்மையார் இல்லறவாழ்வு நீங்கி கணவனிடம் விடைபெற்று துறவற வாழ்க்கைக்கு தலைப்பட்டார். அவ்வாறாக அவர் துறவற வாழ்வை ஆரம்பித்த இடம் தற்போது நல்லூர் தேர்முட்டியின் முன்னால் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடம் என்று அழைக்கப்படும் இடமாகும். அது முன்னர் சடையம்மா மடம் என்றே அழைக்கப்பட்டது. அம்மையார் தான் வாழ்ந்த காலத்தில் 63 நாயன்மார்களின் குருபூசைகளையும் தவறாது பூஜித்து அன்னதானப் பணிகளையும் செய்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்து ஆன்மீக சாதனையாளர்களைப் பொறுத்தவகையில் கதிர்காமம் என்பது தவிர்க்கமுடியாததாக இருக்கிறது. யோகர் சுவாமிக்கும், செல்லப்பா சுவாமிகள் அடிக்கடி கதிர்காமம் போ என்று பணித்தது மட்டுமல்லாது ஈழத்து சித்தர்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் கதிர்காமத்தோடு சம்பந்தப்படுகிறார்கள். அதற்குக் காரணம் போகர் சித்தர் கொடுத்த சக்திமிக்க யந்திரத்தகடு. ஆன்மீக சாதனையாளர்களுக்கு குண்டலினி சக்தியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகஸ்ரத்திற்கு கொண்டுபோவதற்கான இயைபான சூழலை உருவாக்குவதாக இருக்கலாம். சடையம்மா அவர்களும் அடிக்கடி கதிர்காம யாத்திரை செய்தது மட்டுமல்லாமல் கதிர்காமத் திலும் சடையம்மா மடம் ஒன்றையும் நிறுவியிருந்தார்.

குண்டலினி சக்தியைப்பற்றிக் கதைக்கும்போதுதான் அதற்கு ஆதாரமான வாலை வழிபாடு ஞாபகம் வருகிறது. சித்தர்கள் அனைவருமே பெரும்பாலும் முருகன் வழிபாடு (குண்டலினியாம் சிவ குகன் தினம் வருக) மற்றும் வாலை வழிபாட்டுடன் சம்பந்தம் பெறு கிறார்கள். (முக்கோண வட்ட கிணற்றுக்குள்ளே மூல மண்டல வாசிப்பழக்கத்திலே அக்கோண வட்டச் சக்கரத் திக்வாலை அமர்ந்திருக்கிறாள் வாலைப் பெண்ணே என்று கொங்கண சித்தர் குறிப்பிடுகிறார்)

அந்தவகையில் திருநெல்வேலியில் தற்போது புதிதாக குடமுழுக்கு நடந்த வாலை அம்மன் கோயிலுக்கும் சடையம்மாவுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. அங்கு அவர் தியான நிலையில் இருந்து வாலையம்மனின் அருட்பார்வை கிட்டியது. அன்று அக்கோயிலின் யாகசாலையின் மேற்புறம் சடையம்மாவின் திருவுருவத்தை எழுந்தருளச் செய்தார்கள்.

அநேக ரிஷிகள் முனிவர்களுக்கு யோகநிலையில் குண்டலினி சக்தியை உச்சிக்கு கொண்டுவருவதால் அவர்களுக்கு அபரிமிதமான தலைமுடி வளர்ச்சி இருக்குமாம். அந்த வகையில் யோகநிலை கைகூடவே அவரது சடாமுடியும் நீண்டு வளர்ந்து நிலத்தைத் தழுவியது. அதன் காரணத்தாலேயே சடையம்மா என்ற காரணப்பெயரும் அவருக்கு வந்தது. சடையம்மா யோகநிஷ்டையில் அவர் சக்தியை உச்சந்தலைக்கு கொண்டுவரும்போது அவர் தலை வீங்குவதையும் பின்னர் சாதாரண நிலை திரும்பும்போது வீக்கம் குறைவதையும் பக்தர்கள் அவதானித்து பதிவு செய்திருக்கிறார்கள்.

சடையம்மா ஈழத்தில் மட்டுமல்லாது திருச்செந்தூரிலும் மடம் அமைத்து பல்வேறு சமய சமூகப் பணிகளை ஆற்றியிருக்கிறார் என்பது அவரது ஆளுமையைக் காட்டுகிறது. தற்போது அந்த திருச்செந்தூர் மடம் மட்டுமே அவரது பெயரில் இன்றுவரை இயங்கி பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பணிகளைச் செய்துவருகிறது.

சடையம்மா தன்னுடைய இறுதிக்காலத்தில் மாருதப்புரவீகவல்லிக்கு ஈசன் வரமருளிய இடத்தில் (கீரிமலையில் மாருதப்புரவீகவல்லி தவம் செய்த குன்றிற்கு அருகில்) ஒரு மடம் அமைத்து மக்களுக்கான தன் பணிகளைச் செய்து தனக்கான ஆன்மீக சாதனைகளையும் செய்து ஆடி அனுசம் நன்னாளில் 05.08.1936 சமாதியடைந்தார். யோகர் சுவாமி தலைமையில் அம்மையாருக்கு சமாதி வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நல்லூரில், கதிர்காமத்தில், திருச் செந்தூரில், கீரிமலையில் என்று மடங்களை அமைத்து தனியொரு பெண்ணாக ஈழத்து மக்களுக்கு பல பணிகளையாற்றிய சடையம்மா ஆண் பெண் என்ற எந்த பேதமும் இன்றி அனைவருக்கும் ஆத்மலாபம் கிட்டும் என்பதற்கு ஒரு நல்ல உதாரணம்.

"கந்தனை மறவாது வந்தனை செய். அவரே நம் சொந்தம்" என்று கடையிற் சுவாமிகள் சடையம்மாவுக்கு அருளிய உபதேசம் எங்கள் எல்லோருக்குமானது. செல்லப்பர், யோகர் சடையம்மாவுக்கு மட்டுமல்ல நல்லூரான் எங்கள் எல்லோருக்கும் சொந்தமாவான். சடையம்மாவை எமக்களித்த நல்லூர் கந்தனை வந்தனை செய்வோம்.

*பல அறிஞர்களுடன் உறவாடினால் நீயும் அறிஞனாவாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# திருப்புகழைக் கற்றார் கரையேறுவார்

– திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் –

**(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் விளக்க உரைகளிலிருந்து தொகுப்பாக்கம் செய்யப்பெற்றது)**



**திருப்புகழ் - திருச்செந்தூர்**

விந்ததி னூறி வந்தது காயம்
வெந்தது கோடி யினிமேலோ
விண்டு விடா மலுன் பத மேவு
விஞ்சையர் போல அடியேனும்
வந்து விநாச முன் கலிதீர
வண் சிவ ஞான வடிவாகி
வன் பத மேறி யென் களை யாற
வந் தருள் பாத மலர் தாராய்
எந்தனு ளேக செஞ்சுட ராகி
யென் கணி லாடு தழல்வேணி
எந்தை யர் தேடு மன்பர் சகாய
ரெங்கள் சுவாமி யருள்பாலா
சுந்தர ஞான மென் குற மாது
தன் றிரு மார்பி லணைவோனே
சுந் தர மான செந்திலில் மேவு
கந்த சுரேசர் பெருமாளே.

**பொழிப்புரை:**

அடியேனுடைய உள்ளத்துள் ஒப்பற்ற செழுஞ் சோதியாய் விளங்கி எனது கண்களில் நடனம் புரிகின்றவரும் பொன் போன்ற சடையுடையவரும், எமது பிதாவும் தேடுகின்ற அடியவர்க்கு உதவுபவரும், எங்கள் சுவாமியுமாகிய சிவபிரான் பெற்றருளிய குமாரரே. அழகும் அறிவும் மென்மையும் படைத்த வள்ளியம்மையின் திருமார்பில் பொருந்துபவரே, அழகான திருச்செந்தூரில் எழுந்தருளிய தேவர் தலைவர்கட்கும் பெருமிதமானவரே, சுக்கிலத்தில் ஊறிவந்த சரீரம் நெருப்பில் வெந்தழிந்தவை எத்தனையோ கோடி. இனியாவது உமது பற்றை விடாது உமது பதமலரை விரும்புகின்ற புலவர்களைப்போல் அடியேனும் நன்னெறிக்கு வந்து அழிவும் முன்வினையும் தீரும்பொருட்டு வளமையான ஞான வடிவு பெற்று நிலைத்த பதவியையடைந்து எனது பிறப்பிறப்பாலாகிய இளைப்பு நீங்குமாறு அடியேன் முன் வந்து அருள்மயமான பதமலரைத் தந்து அருளுவீராக.

*நன்றாக உழைக்கின்ற எந்த மனிதனும் ஏழ்மையை அடைவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரிவுரை:**

***விந்ததினூறி வந்தது காயம் வெந்தது கோடி -***

ஆடவனுடைய சுக்கிலத்திலே ஊறி வந்த இந்த உடம்பு தீயினுள் எரிந்தது எத்தனையோ கோடிக்கணக்கானவை.

வேளை தவறாமல் உயர்ந்த உணவுகளையுண்டு வளர்த்த இந்த அரிய உடம்பு முடிவில் நெருப்புக்கு இரையாகிறது.

இவ்வாறு வெந்தழியக்கூடிய இந்த வீணுடலை ஓம்பும்பொருட்டு சூதும் வாதும் பொய்யும் களவும் புரிந்து தடுமாறுகின்றனர் மக்கள்.

***விண்டு விடாமல் -***

இறைவனுடைய நினைவிலிருந்து விலகாமலிருக்க வேண்டும். இடையறாத தியானத்தை இது குறிக்கின்றது.

***உன்மதமேவ விஞ்சையர் -***

விஞ்சையர் - புலவர், விஞ்சை - வித்தை. ஆதலால் வித்தையை உடையவன் வித்துவான். புலவர்கள் இறைவன் திருவடியையே விரும்புவார்கள். அதுவே அறிவின் பயனாகும்.

***வந்து -***

அருள் நெறிக்கு வந்து ஆன்மாக்கள் உய்ய வேண்டும்.

***விநாச முன் கலிதீர -***

விநாசம் - மிகுந்த அறிவு.

முன்கலி - முற்பிறப்பில் செய்த தீவினை.

***வன்பத மேறி -***

வலிய நிலைத்த பதவியை அடைதல்.

***என் களை ஆற -***

இறப்பதும் பிறப்பதுமாக ஓயாது மாறி மாறி இந்த ஆன்மா களைத்து விடுகின்றது.

"எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்" என்கிறார் மாணிக்கவாசகர்.

***எந்தனுள் ஏக செஞ்சுடராகி -***

மாலயனாதி வானவர்க்கும் எட்டாத இறைவன் அருணகிரி நாதருடைய உள்ளத்துள் ஒப்பற்ற ஒளி வடிவாகி நின்று அருள் புரிகின்றார்.

இதனால் அவருடைய தவ வலிமை வெளிப்படுகின்றது.

*உயர்ந்த உள்ளங்களுக்கு இடையில்தான் தூய்மையான தோழமை மலர முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என் கணிலாடு -*

இனி இறைவன் அருணகிரிநாதருடைய கண்களில் விளங்கி நடம் புரிகின்றாராம். உத்தம ஞானிகள் கண்ணைவிட்டு இறைவனுடைய அருட்காட்சி விலகாது.

"கனத் தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தியான் அவன் என் கண்ணுளானே"

-அப்பர்.

கற்புடைய மாதர்கட்கும் கணவனார் கண்ணிலே நின்று காட்சி தருபவராகிறார்.

*தேடும் அன்பர் சகாயர் -*

ஆண்டவனையே சதா தேடித் திரிகின்ற அடியவர்க்கு உதவி புரிகின்றான் இறைவன்.

*எங்கள் சுவாமி -*

எமக்கே சொந்தமான தெய்வம் என்கிறார்.

*சுந்தர ஞான மென் குறமாது -*

வள்ளியம்மையார் முற்பிறப்பில் திருமாலின் கண்மலரில் தோன்றிய சுந்தரவல்லி என்பதை இது குறிக்கிறது. மேலும் அவள் ஞானாம்பிகை ஆவாள். ஞானகுறமாதை என்கிறார்.

**கருத்துரை:**

சிவகுமாரரே! வள்ளி மணவாளரே! செந்திலாண்டவரே! என் பிறவிக்களையாற திருவடி மலரைத் தருவீர்.

**தொகுப்பாக்கத்திற்கான குறிப்புரை:**

முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்பராவர் என்கின்ற இந்த உடலின் நிலையாமை பற்றி நாயன்மார்கள் முதற்கொண்டு எத்தனையோ மகான்கள் தத்துவார்த்தமாக எடுத்து இயம்பியுள்ளனர். இவர்களிலே அருணகிரியார் தமது திருப்புகழ் வரிகளிலே இந்தச் சரீரத்தின் நிலையாமை பற்றி சொல்லுக்குச் சொல் நயம்படச் சொல்லியிருப்பதானது எத்தகைய அறிவிலிக்கும் ஞானத்தைப் புகட்டுவதாக உள்ளது. இதற்கு நாம் யாது செய்யவேண்டுமெனில் இத்தகைய பாடல்களை திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும். இதன் பயனாக எமக்கு இயல்பாகவே ஒரு சுவை தோன்றும். அந்தச் சுவை உலகியல் வாழ்வின் யதார்த்தத்தை எமக்குப் புகட்டுவதாக அமையும். அவ்வகையாக ஞானமும் பக்தியும் கைகூடி வருவதாக அமையும். ஆதலினால் எமது இளந்தலைமுறையினரை சீர்மியப்படுத்தவும் அவர்களது வாழ்வில் ஒளியேற்றவும் இதன்மூலம் சீரிய உலகியல் நெறியை உருவாக்கிக்கொண்டு ஆன்மீக மார்க்கத்தில் இணையவும் திருப்புகழ் வழிகாட்டி யாகின்றது.

அடுத்த திருப்புகழ் தொடரில், குன்று தோறாடல் மேவிய குமரப்பெருமான்மீது பாடப்பெற்ற திருப்புகழும் அதற்குரியதான விளக்க உரைகளும் அமையும். (தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரம முதல்வருக்கு அகவைதின வாழ்த்துப் பா

– பேரவையினர் –

மன்னு மிப் பேருலக இன்பங்கள் தழைய
விரி பொன்னமுதுச் சந்நிதியான்
பொற்பதம் இரண்டும் பற்றி இன்னருட்
பணி முதலாய் எந்த நாளையும்
பரவி நன் அன்ன மீத லொடு
பற்பல பணியும் ஆற்றி
தன் அகவை ஏழ் பத்து ஆறும்
பெற்ற சந்நிதியான் ஆச்சிரம
முதல்வர் தனை வாழ்த்த
அன்னமுதன் அண்ணன்
பொன்னானை முகனும் காப்பதாமே.

பொன்னமுது பொலிந்திலங்கும்
சந்நிதியான் அன்னமுதை
மன்னு பணி முதலாய் கொண்டு
அடியவர் பசி தனைத் தீர்த்து
பின்ன மில்லாத் தொண்டதுவாய்
பல்லுயிர் ஓம்பும்
பொன் மனச் செம்மலென
மோகன முதல்வரே நீர் வாழ்க!

கொடிதிலுங்கொடிது இளமையிலுற்ற வறுமை
எனஉணர்ந்து படி பல கொடுத்து
படித்துயர முனையும் பல்கலை மாணவர்
மிடி தீர்த்து மாதமுறும் படி வழங்கி
படு துயர் போக்கும் வள்ளலே நீர் வாழ்க
நோயுற்று அடர்வோரின் பிணி போக்கும் வகை ஆகி
மருந்தொடு ஆதாரம் பலவும் இடம் தேடிக் கொடுத்து
மன்னுயரோம்பும் உயிர்த்துணை
இதுவென இன்னுரை பகன் றுதவும்
கருணா முதலே நீர் வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கே யாழ் முதலாய் வன்னி கோணமலை
அம்பாறை மட்டக் களப்பிலும் தென் நோக்கி
புத்தளம் பொலநறுவை அனுராதபுரம்
மொனராகலை மலையகம் எங்கிலுமாய்
கோயிலும் குடிமனையும் பள்ளிச் சாலைகளும்
சிறப்புற ஆன்றதோர் பல்லுதவி
ஈயும் வள்ளலாய் நீர் வாழ்க.

சீரிளஞ் சிறுவோர்கள் சீர்மையுடன் - சிறந்தோங்க
ஊரிலங்கு அறநெறிப் பள்ளிகளும் - அங்கு
பேரிலங்கப் பயிலும் மாணவர்க்குமாய் வாரி
நிதி சுரக்கும் வாரிதியே நீர் பல்லாண்டு வாழ்க!

பற்பல பணிக்குமென நற்தொண்டர் தம் படை சமைத்து
ஆன்மீக நெறிக்குமென
பேரவையும் யாத்து கடப்பாடும் கண்ணியமும்
நெறிமுறையாய் பலவுரைத்து கடமையே
ஒழுங்குமென பகலிரவாய் உழைக்க வல்ல
உத்தமரே நீர் வாழ்க!

அமுதகலா யோகியென்றும் அமுத சுரபியென்றும்
கலாநிதியென்றும் சாதனைத் தமிழன் என்றும்
எத்தனை எத்தனை விருதுகள் பட்டங்கள்
ஏனெனில் நீர் ஐ.நாவின் மனித உரிமைகள்
காப்பாளனும் அல்லவோ.

சந்நிதி வேலவன் சாந்துணை புரியவும் - நின்
சற்குருவானவர் நற்றுணை நின்று நலமுடன் ஆளவும்
சந்ததியாய் நின்று நற்பணி புரிந்து
இம்மானிலம் தழைக்கவும் ஐயனே... நீர் வாழ்க!
அகவையோர் நூறுகண்டு பல்லாண்டு
பல்லாண்டு இப்புவிமீது வாழ்க! வாழ்கவே!!

---

இல்லாதவர்களுக்கு உதவுவதே மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமையும் பொறுப்புமாகும். செல்வம் இருந்தும் தர்மம் செய்யாதவன் சீக்கிரம் அவற்றை இழந்து விடுவான். வாரி வாரி வழங்குபவனுக்கு வானிலிருந்து வைரம் கொட்டும். ஒவ்வொரு நன்கொடைச் செயலும் சொர்க்கத்திற்குச் செல்லும் வழியின் படிக்கற்களாகும்.

*புத்தகங்கள் காலம் என்னும் கடலின் கரையிலே நிறுத்தப்பட்டுள்ள கலங்கரை விளக்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

05.09.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:– "மனிதனுடன் ஆன்மீகமும் உளவியலும்"

வழங்குபவர் :– திருமதி சிறிமேனன் வினோதினி அவர்கள்

(யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவை மன்றம்)

---

12.09.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

19.09.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:– "மகாபாரதம்" (தொடர்)

வழங்குபவர் :– செஞ்சொற் செல்வன் திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்

(ஆசிரியர்)

---

26.09.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் புரட்டாதி மாத வெளியீடு

333 ஆவது மலர்

வெளியீட்டுரை:– திரு த. காண்டீபன் அவர்கள்

(ஊடகவியளாளர்)

மதிப்பீட்டுரை :– திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

(ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org